WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14.04.2018 - 13.05.2018

சுவடி: 6.12

திருவள்ளுவர் ஆண்டு 2049

ISSN 2195-6480




## ஈழத் தமிழினப் படுகொலையில் மத பீடங்களின் பங்கு!

FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRNACE, ENGLAND, DENMARK, NORWAY, SWEDEN, ITALY, CANADA








# TKS BEST FOODS

FAX: 0231/95046882 TEL: 0 231/ 95046883
WEB: TKS-BESTFOODS.DE EMAIL: INFO@TKS-BESTFOODS.DE

ஐரோப்பாவிற்க்கான
புதிய சேவை




# ortel MOBILE




**19,99€[15)]**
/4 Wochen

# ஒரே SIMல் இருந்து...

## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.

## 3GB இன்ரர்னெற்றும் பாவிக்கலாம்.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும்,

அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.

3GB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு பெறலாம்.

**19.99 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**




- 300 Minuten in Deutschland & in 50 weitere Länder
- Internet Flat 3 GB
- Surfen&Telefonieren in der EU
- On-Net Flat (deutschlandweite Nutzung)

www.ortelmobile.de

Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+



அகரம்

மாதாந்த இதழ் – Monthly Magazine

13 சித்திரை 2018 – 14 வைகாசி 2018
சுவடி / Issue : 6.12

**தலைமை ஆசிரியர்**
திரு. த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்**
திரு. வன்னித்தம்பி

**ஆசிரியர் குழு:**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராசா (சுவிஸ்)

**நிழற்படப்பிரிவு:**
திரு வியாசன்
செல்வி கயல்விழி

**ஒப்பு நோக்குனர்:**
திரு அர்சுனன்

**தொடர்புகளுக்கு :**
European Tamils Union e.V.
PO.BOX 4153 59073 Hamm
Germany
Tel : 004923819877897
Fax : 00492381956610
Email : *editor@akaram.eu*

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced,copied and transmitted in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission
© ETU e.V.2014
All rights reserved

## நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல் பெரு மக்களுக்கும் வணக்கம்.

உங்களின் பலமான ஆதரவால் அகரம் தனது ஏழாவது ஆண்டினை நிறைவு செய்து எட்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். வருகின்ற ஆண்டுகளிலும் உங்களின் ஆதரவு பன்மடங்கு பெருகி அகரம் இதழ்களை மேலும் பொலிவுற வைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமை ஆணைச் சபை அமர்வுகள் ஒரு நடைமுறை செயலமர்வு என்பதால் அதிசயங்கள் எதிர்பார்க்கப் படாத ஒன்றுதான். ஆயினும் எமது தேசியத் தலைமை அமெரிக்க வெளி உறவு அதிகாரிகள் மட்டத்திலே எதோ வெட்டி விழுத்த சுமந்திரனை அனுப்பித் தனது ஈமக் கடனை நிறைவேற்றி விட்டதாக அறியப் படுகிறது.

வன்னியின் சிங்கம் தங்கத் தமிழ் செல்வன் சிறீதரன் மட்டும் வந்து பக்க அறை விவாதங்களில் கச்சேரி நடத்திப் போனார். அதே வேளையில் கஜேந்திர குமார் போன்று ஏனைய பேச்சாளர்களும் திட்டமிட்ட சிங்களப் படையின் குறுக்கீடுகளால் வாதங்களில் கோட்டை விட்டுவிட்டார்கள் என்ற செய்திகளும் வந்தன. பக்க அறை விவாதங்கள் போதிய முக்கியத்துவம் கொடுக்கப் படுதில்லை என்பதால் அவற்றின் பெறு பேறுகள் முக்கியமானவை அல்ல.

ஆனால் பேரவையில் யார் என்ன எப்படிப் பேசுகிறார்கள் என்பதுதான் முக்கியம். அதைச் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பை என்றுமே எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது கடமையாக கொண்டு செயற்பட்ட வரலாறு கிடையாது. எனவேதான் தமிழ் மக்கள் உலகில் யாரும் கேட்பாரற்ற நாதியற்ற இனமாகித் தவிக்கிறது.

பேசும் திறமையும் தகமையும் கொண்ட வடமாகாண முதலமைச்சர் வேலைப் பழு காரணமாக வரவில்லை எனக் காரணம் தெரிவித்தும் சிலர் அப்படி என்ன தலைபோகிற வேலை ஒருக்கா வந்துதான் போனால் என்ன? என்று வசைகளும் பாடி உள்ளனர்.

அவரது பதவிக் காலம் முடிவை எட்டுகிறது. அவரை த.தே.கூ. திரும்பவும் முன்னிறுத்தாது என்பது உலகறிந்த உண்மை. தனித்தோ தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்தே அரசியல் செய்யும் மன நிலையில் அவர் இருப்பதாகத் தெரியவில்லை. அவரது முதுமையும் உடல் நலமும் எந்த அளவுக்கு அத்தகைய

அரசியல் சேவைக்கு இடம் கொடுக்கும் என்பது போன்ற தனி நபர் கரிசனைகளை முற்றிலும் புறந்தள்ளி அரசியல் பேசும் சுய நல அரசியலை அகரம் செய்யாது. அவரை அடுத்த வட மாகாண சபைத் தேரல்தலில் ஓரங்கட்டும் செயற்பாடுகள் ஆரம்பித்து விட்டன.

அவரது சேவை தொடர்ந்து தமிழ் மக்களுக்கு கிடைத்தாலும் கிடைக்காது போனாலும் அவரால் ஐ.நா. சபையிடம் கையளிக்கப் பட்ட மாகாண சபைத் தீர்மானங்களும் கடிதங்களும் நேர்முக கோரிக்கைகளும் இதுவரை எந்த ஒரு தமிழ் தலைமையும் செய்திராத சாதனை. இதற்கு மேலாக வேறு எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்து விட முடியாது.

அவர் முன்வைத்த தீர்மானங்களையும் கோரிக்கை களையும் உலக அரங்கில் வலயுறுத்துவதும் அவற்றை வென்றெடுப்பது மட்டுமே எமது இனத்தின் இலட்சியமாக எமது புலம் பெயர் தமிழ் மக்களும் அமைப்புகளும் செயற்பட வேண்டும் என அகரம் பணிவோடு கேட்டுக் கொள்கிறது.

நல்லாட்சி அரசும் அதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர் கொண்ட அவருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தோற்கடிக்கப் பட்டதால் அவர் சம்பந்தன் அடைக்கல நாதனின் பதவிகளும் பாதுகாக்கப் பட்டு விட்டன. அடுத்து அவரது கவனம் மைத்திரியை வீட்டுக்கு அனுப்புவதாக இருக்கும் எனச் சில நோக்கர்கள் கூறி வருகின்றனர்.

எல்லாருமே குள்ள நரிகள் கூட்டமாக நாட்டைக் கொள்ளை அடித்து குதூகலமாகச் செயற்பட்டு வருதாகத் தெரிகிறது. இதில் யார் கள்ள நரி யார் குள்ள நரி என கண்டு பிடிக்க யாரால் முடியும்?

நல்வாழ்த்துகளைத் தெரிவித்து விடை பெறும்,

- அகரம் குழுமம்


விளம்பரத்
தொடர்புகளுக்கு:
0049 17647118711







# ஈழத் தமிழினப் படுகொலையில் மத பீடங்களின் பங்கு !

– த.எதிர்மன்னசிங்கம்

உலகை ஆட்டிப் படைப்பது அமெரிக்காவும் இஸ்ரவேலும் என்பது எவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. இந்த இரு நாடுகளை மட்டும் அல்ல ஐரோப்பிய தென் அமெரிக்க ஆபிரிக்க நாடுகளையும் ரசியாவையும் கூட ஆட்டிப் படைக்கும் வல்லமை வத்திக்கானுக்கும் பாப்பாண்ட வருக்கும் இன்று இருக்கிறது என்பதை யார் அறியாதிருந்தாலும் சிங்களமும் மகிந்த ராஜபக்சவும் நன்கே அறிந்திருந்தனர். இதற்கு ஆதாரமாக கொழும்பின் கத்தோலிக்க மேலாயர் வண. றஞ்ஜித் மல்கொம் தமது சிங்கள இனவெறி உணர்வை பல தடவைகள் வெளிப் படுத்தத் தவறவில்லை என்பதை தமிழ் கத்தோலிக்க ஆயர்கள் பலரும் கூறிவந்துள்ளனர்.

இலங்கை றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயராக வத்திக்கானில் பாப்பரசர் தெரிவுக் குழுவின் உறுப்பினராக பாப்பரசர் பதவிக்கு தெரிவாகும் ஒருவராகப் பேசப்பட்டவர்தான் வண. கர்தினால் மல்கொம் றஞ்ஜித். இவரை ஒரு கத்தோலிக்க மதத் தலைவராக மட்டும் அல்லாமல் ஒரு சிங்கள இன மேலாதிக்க அரசியல் வாதியாகவும் மகிந்த ராஜபக்சவின் ஆரிய பௌத்த சிங்கள இனவெறி அரசியலுக்கு முழுமையான ஆதரவு வளங்குபவராகவும் விளங்குகிறார்.

ஈழப் போரின் பொழுது இரண்டு தடவைகளுக்கும் மேலாக வத்திக்கானில் பாப்பரசருடன் நேர்முக சந்திப்பை தீவிர பௌத்த இனவேற்பாளரான மகிந்த நடத்த முடிந்தது என்றால் அது வெறும் சாதாரணமான சாதனை அல்ல. குறிப்பாக 9 ஜ/லை 1995 ல் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நவாலி புனித பேதுறுவானவரின் தேவாலயத்தின் மீது அரசின் குண்டு வீச்சு விமானத் தாக்குதல் நடந்திருந்த பின்தளத்தில் இச்சந்திப்புகள் நடந்திருந்தன.

அரச படை அறிவித்திருந்த போர் எல்லைக்கும் அப்பால் இடம் பெயர்ந்து தஞ்சம் புகுந்திருந்த அப்பாவித் தமிழ் பொது மக்கள் மீது இக்குண்டுத் தாக்குதல் நடந்திருந்தது. அத்தாக்குதலில் தேவாலயம் முற்றாக இடியுண்டு பெண்கள் குழந்தைகள் உட்பட 120 அப்பாவித் தமிழ் பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

அன்றைய பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் சில நாட்களின் பின்னர் தமது கவலையைத் தெரிவித்து இனமுரண் பாடுகளால் இலங்கை உடைகிறது எனவும் தெரிவித்திருந்தார்.

வத்திக்கான் இப்படியான மென் போக்கை கடைப்பிடிக்க கொழும்பின் மேலாயர் றஞ்ஜித் காரணம் என்பதைப் பல முறை ஏனைய கத்தோலிக்க திருச்சபை அங்கத்தவர் குறிப்பாக வண.பிதா இமானுவல் அடிகளார் உட்படப் பலர் பகிரங்கமாகக் கூறியும் வந்துள்ளனர்.

போர் முடிந்து 5 ஆண்டுகளின் பின்னர் வெளியான கொழும்பு ரெலிகிராஃப் இணையம் மேற் படி படத்தை வெளியிட்டு அதில் றஞ்சித் பேராயரின் மருமகள்

றுவானி குரே தேவையான தகுதிகள் இல்லாத போதிலும் பாரிசில் இலங்கைத் தூதரகத்தில் பணிக் கமர்த்திய பேராயரின் அரசியல் செல்வாக்கு உதவியது என குறிப்பிட்டிருந்தது.

மேலும் பாப்பரசரின் இலங்கை வருகை யார் எதிர்த்தாலும் இடம் பெறும் என பேராயரின் நெருங்கிய நம்பிக்கையாளரான கோத்தபாயா ராஜபக்சவுக்கு வழங்கிய வாக்குறுதி என அச்செய்தி தெரிவித்தது. படத்தில் மகிந்த தம்பதியரின் நடுவே பேராயரின் தரிசனம் மகிந்தரின் செல்வாக்கை காட்டுகிறது.

02.10.2009ல் அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்னிசால் அந்தரங்கம் என வகைப் படுத்தப் பட்ட ஆவணத்தில் கத்தோலிக்கப் பேராயர் ரஞ்ஜித் பௌத்த வலது சாரிகளின் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மகிந்த குடும்பத்துடன் நல்ல உறவை கொண்டிருக்கிறார் ராஜபக்சவின் மனைவி ஒரு நல்ல கத்தோலிக்கர்.

மகிந்தர் வலது சாரி பௌத்தர்களின் கடுமையான அழுத்தங்களை எதிர் கொள்கிறார் என்பது முற்றிலும் உண்மை. பொறுப்புக் கூறல் தொடர்பான சர்வ தேச அழுத்தம் அதிகமானால் பின்விளைவுகள் கடுமையாக இருக்கும் என்றும் வாதிடலாம்.

'மகிந்த ராஜபக்ச ஒரு நல்ல மனிதர் எனத் தாம் நம்புவதாக பேராயர் கூறினார். அரசியல் வானில் அவர் ஒப்பீட்டில் மென்போக்குள்ளவர். அவர் எதிர் கட்சியில் இருந்த பொழுது ஐரோப்பிய நாடுகளில் மனித உரிமை கூட்டங்களில் பங்கு பற்றினார் என்பதை நினைவூட்டினார். ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் பௌத்த வலது சாரிகளின் பலத்த அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.'

சர்வதேசத்தில் பலமிழந்தவராக அவர் காண்பிக்கப் பட்டால் மிகத் தீவிரமான சக்திகள் வெற்றி பெற இடமளித்து விடும். உண்மையில் ஜனாதிபதிக்கு ஏதும் நடந்தால் இராணுவப் புரட்சி உட்பட நாட்டில் குளப்பம் வரலாம் என்றும் வாதிட்டார்.

கத்தோலிக்க திருச் சபைதான் என்றில்லை பிரித்தானியாவின் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் டுலிப் டி சிக்கேராவும் தமது மத ஆன்மீகப் பணியை தமிழின அழிப்புக்கு ஆதரவாக சிங்களப் பேரினவாதத்தை தூக்கி நிறுத்தினார் என்பதற்கான ஆதாரத்தை விக்கி லீக்ஸ் பகிரங்கப் படுத்தி உள்ளது.

அங்கிலிக்கன் ஆயர் அமெரிக்க சர்வதேச மனித விழுமியங்களை வளர்க்க வேண்டும் எனக் கூறிய போதிலும் அமெரிக்க அரசு மவுனமாக இருந்துவிடக் கூடாது எனவும் இலங்கையில் அமெரிக்க கருத்துகளை வெளிப் படுத்த வேண்டும் எனவும கேட்டுக் கொண்டார்.

2010 பெப்ரவரி 26ந்திகதி எழுதிய கடிதத்தில் அங்கிலிக்கன் ஆயரின் ஆலோசனையும் நம்பிக்கையும் என்ற உபதலைப்பில் பின்வருமாறு பொது மக்களும் எறி கணை பீரங்கி குண்டு தாக்குதல்களுக்கு ஆளான போதிலும் கொழும்பு மேலாயர் எல்லா முறைப்பாடுகளையும் குப்பைத் தொட்டியில் எறிந்து தமது ஆன்மீக ஊழியத்தை மிகச் சிரத்தையோடு செய்துள்ளார் என்பதற்கு இந்த விக்கி லீக்ஸ் ஆவணம் சாட்சியாக நிற்கிறது.
நவாலி புனித பேதுறு தேவாலயத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டு வீசி அபயம் தேடிய பொது



மக்களைக் கொன்ற பொழுதிலும் இந்த ஆயரின் அருட்பார்வை பாதிக்கப் பட்ட மக்கள் தமிழ் மக்கள் என்பதால் குருடாகிப் போனது வரலாறு.

எப்படியிருப்பினும் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் பிரச்சினைகளை கண்டிப்பதற்குப் பதிலாக சர்வதேச படிப்பினைக்கான சந்தர்ப்பங்களாக தமது வரலாற்றையும் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இலங்கையின் நீண்ட கால கலனித்துவம் வாத்தியார் மன நிலையால் சுலபமாக ஆத்திரம் அடைந்து விடும்.

மேலும் காலப் போக்கில் தென்னாபிரிக்க நிற பேதம் அமெரிக்காவின் சமூக உரிமைகள் போன்று மக்கள் சுய நிலைக்குத் திரும்பி விடுவார்கள் எனவும் தெரிவித்ததாக குறித்த ஆவணம் பதிவு செய்துள்ளது.

கத்தோலிக்க மதம் மட்டும் அல்ல இஸ்லாமிய மத பீடங்களும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்தையே மக்களிடத்தே பரப்பி தமிழ் இன அழிப்பில் பங்கு கொண்டன.

சரி இந்துமத பீடங்களாவது தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப் பாட்டை வெளிப் படுத்தினவா என்றால் அதுவும் சந்தேகமே. சாய்பாபா ஆசி வழங்கினார். அவரது பக்த கோடிகள் எல்லாம் பஜனை பாடி தமிழ் இன அழிப்பை கண்டு கொள்ளாமலே இருந்தனர்.

தமிழ் மக்களின் பிரதி நிதிகளும் போராட்டக் குழுக்களும் இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூண்டோடு இந்தியாவில் ஈழத் தமிழ் மக்களின் அவலக் குரல் கேட்காத படிக்கு உண்டு களித்து ஒளிந்து கொண்டனர்.

போரின் பொழுது வடக்கு கிழக்கு கத்தோலிக்க தேவாலயங்களும் தெல்லிப் பழை துர்க்கை அம்மன் மாவிட்டபுரம் கந்த சுவாமி கீரிமலை சிவன் கோயில் என எல்லாக் கோயில்களுமே விமானக் குண்டு மற்றும் எறிகணை வீச்சுகளால் பக்தர்களை அபயம் தேடித் தஞ்சம் புகுந்தவர்களை கூண்டோடு கைலாயத்துக்கும் வைகுண்டத்துக்கும் எமலோகம் சொர்க்கம் நரகம் என அனைத்து உலகங்களுக்கும் அனுப்பி வைத்த அதிசயத்தை உலகம் கண்டது.

முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் ஆறு கால பூசை படையல் வைத்த தமிழனுக்கு சாகும் தறுவாயில் வாய்க்கரிசியைக் கூட எந்த ஒரு கடவுளும் போட வில்லை என்பது தமிழனின் தலைவிதியாய் இருந்தது.

கடந்த 100 ஆண்டுகால தமிழரின் அரசியல் ஈழத் தமிழனின் அனைத்து வளங்களையும் செல்வங்களையும் பறி கொடுத்து உலக அகதி இனமாக வாழும் நிலையை எப்போது எப்படி யாரால் மாற்றி மீள உயரப் போகிறோம்? அடுத்த தலைமுறை அதற்குத் தயாரா அல்லது தயார்ப் படுத்துகிறோமா?




LINUS
media




**ஐரோப்பாவின் முன்னனி IPTVகளை வாங்குவதற்கும்
புதிப்பிப்பதற்கும் எம்மை தொடர்புகொள்ளவும்.**




www.chitramtv.eu

chitram 4K 4K mini ULTRA HD

**நீங்கள் வீட்டில் இருந்தபடியே online மூலம்
எம்மிடம் புதுபித்துக்கொள்ள முடியும்.**

**மேலதீக தொடர்புகளுக்கு:**

# www.linusmedia.nl

# 0031 621 604 168
# 0031 620 897 414

# நம்பிக்கையில்லாப் பிரேரணை பலமடைந்தது யார்?



– சண் தவராஜா

இலங்கை அரசியலில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி இருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை நாடகம் ஒரு வழியாக முடிவிற்கு வந்திருக்கிறது. பிரேரணைக்கு எதிராக 122 வாக்குகளும் ஆதரவாக 76 வாக்குகளும் கிடைத்திருந்தன. 26 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அத்தோடு நடுநிலையான பதவியை வகிக்கும் சபாநாயகரும் வாக்களிக்கவில்லை. இந்நிலையில் 46 அதிகப்படியான வாக்குகளால் பிரேரணை தோல்வியைத் தழுவியது.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் 106 ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் உள்ளனர். இதில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 பேரும், தமிழ் முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த 6 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐவரும், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் அடங்குவர்.

இரண்டாவது பெரிய கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 95 உறுப்பினர்களில் அரசுத் தலைவர் மைத்ரிபால சிறிசேன ஆதரவு நிலைப்பட்டைக் கொண்டவர்களாக 41 பேரும் முன்னாள் அரசுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக 54 பேரும் உள்ளனர்.

எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 16 பேரும், மக்கள் விடுதலை முன்னணி சார்பில் 6 பேரும், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பவற்றின் சார்பில் தலா ஒருவர் வீதமும் உள்ளனர்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் 106 பேரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மைத்ரிபால சிறிசேன ஆதரவு நிலைப்பட்டைக் கொண்ட 41 பேரும், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருமாக 153 பேர் அடங்கியுள்ளனர்.

ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 54 பேருடன் இணைந்து வேறு 22 பேர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து உள்ளனர். இதில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 6 பேரைச் சேர்த்துக் கொண்டு பார்த்தாலும் கூட அரசாங்கத் தரப்பில் இருந்து 16 பேர் இந்த அணியோடு இணைந்து வாக்களித்திருப்பதைப் பார்க்கலாம்.

வாக்கெடுப்புக்கு முன்னதாக தமது கட்சி வாக்களிப்பில் நடுநிலை பேணப் போவதாக சிறி லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்திருந்த நிலையில் 22 உறுப்பினர்கள் அதனை ஏற்றுக் கொண்டு வாக்கெடுப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்து இருந்தனர். ஆனால், அதே

கட்சியைச் சேர்ந்த ஆறு அமைச்சர்கள் உள்ளிட்ட 16 பேர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததாகவும், இந்நிலையில் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு உள்ளன.

இவை நடப்பு அரசியல் சார்ந்த விடயங்கள். இந்தக் காட்சிகள் தொடர்ந்தும் அரங்கேறத்தான் போகின்றன. மாற்றங்கள் ஏற்படத்தான் போகின்றன.

அதேவேளை, ஒரு சிலர் உற்சாகம் அடைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. அதில் முதலாவது நபர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. அவர் அரசாங்கத்தில் மாத்திரம் அல்லாமல் கட்சியிலும் தனது இடத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளார். அடுத்த பொதுத் தேர்தலை இலக்கு வைத்து அவர் காய்களை நகர்த்தி வருகின்றார்.

அடுத்தவர் எதிர்க் கட்சித் தலைவராக உள்ள இரா சம்பந்தன். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியோடு பேச்சு நடாத்தி உடன்பாடு கண்ட பின்னரேயே பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை இது ஊடகச் செய்தியாகவே வலம்வந்து கொண்டிருக்கின்றது. அது உண்மையானால் தமிழ் மக்கள் நலன் சார்ந்து செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரிந்து கொண்டிருக்கும் தனது செல்வாக்கைச் சீர்செய்ய முயன்றிருக்கின்றது எனக் கொள்ளலாம்.

இதைத் தவிர பிரேரணைக்கு எதிராக வாக்களித்த சிலருக்கு நன்கொடையாக கோடிக் கணக்கில் பணம் வழங்கப்பட்டதாக வதந்திகள் உலாவுகின்றன. அவை குறிப்பிட்ட காலத்திற்கு வதந்திகளாகவே தொடரும் என நம்பலாம்.

ரணில் விக்கிரமசிங்காவின் இடத்தில் மகிந்த ராஜபக்ச அவர்களை அமர்த்திவிட்டால் தமது செயற்பாடுகளுக்கு ஒரு உத்வேகம் கிடைக்கும் என நினைக்கும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் ஒரு சிலரும், ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சியைப் பதவியில் அமர்த்த நினைக்கும் ஒரு சிலரும், போகிற போக்கில் தமிழ் மக்களுக்கு அமையப் போகும் புதிய அரசியலமைப்பு மூலம் - நன்மைகள் கிடைப்பதைத் தடுத்து விட நினைக்கும் சிங்களக் கடும்போக்காளர்களும் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த வெற்றியினால் துவண்டு போயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் யதார்த்தத்தை மறந்து சிந்திக்கின்றார்கள் என்பதே உண்மை.

2015 நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கியதில் முக்கிய பங்காளிகள் பன்னாட்டு சமூகத்தினர். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் ஒரு அங்கமாக பன்னாட்டு சமூகத்தினால் முன்மொழியப்பட்ட காட்சிகளே இதுநாள்வரை சிறி லங்காவில் அரங்கேறி வருகின்றன. தீர்வு விடயத்தில் தாமதம் நிலவினாலும் தமிழ் மக்களில் ஒரு சிறு பிரிவினரும் பன்னாட்டு சமூகமும் சிங்களத் தலைமைகள் ஏதோவொரு தீர்வை வழங்கியே ஆவார்கள். வழங்கியே ஆகவேண்டிய நிலையில் உள்ளார்கள் என நம்புகிறார்கள். இத்தகைய பின்னணியில் தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்தை இழப்பதற்கு பன்னாட்டு சமூகம் முடிந்தவரை அனுமதிக்காது என நம்பலாம்.

இந்த நடைமுறை யதார்த்தத்தை சரியாகத் தெரிந்து வைத்திருப்பவர்களுள் ஒருவர் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச. அதனால்தான் அவர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்பட்ட போதில் அதில் கையொப்பம் இடவில்லை. தனது செயற்பாடுகள் எல்லை மீறிப் போனால் போர்க் குற்றங்கள் என்ற அஸ்திரம் தன்மீது பாவிக்கப்படும் என்ற நியாயமான அச்சம் அவருக்கு உள்ளது. எனவே, அடக்கி வாசிக்க வேண்டிய நிலையில் அவர் உள்ளார். பொதுத்தேர்தல் ஒன்றில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றும் வரை அவர் இந்த நிலைமையைக் கடைப்பிடித்தே ஆக வேண்டிய நிலையில் உள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கான காலம் வெகு சொற்பமாகவே உள்ளது. தற்போதைய நிலையில் 149 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்த கருத்தைக் கொண்டவர்களாக உள்ள நிலையில் - ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்கக் கூடிய சூழல் நிலவுகின்ற (?) நிலையில் - இதைவிட வேறு சந்தரப்பம் கிடைக்காது என்பதே யதார்த்தம். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறுமா? அனைவரோடும் சேர்ந்து காத்திருப்பதைத் தவிர வேறு வழி?!


ImmoFinance
Suisse GmbH
Contact :
Selvaratnam Mathan
புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்
076 303 22 16
mathan@gmx.ch

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

பாகம் - 9

– அவதானி



அறிவியலாளர்களின் சிந்தனை அவரவர் நாட்டினை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும்.

தொடர்ந்து தம்மை வல்லரசாக வைத்துக் கொண்டு உலகிற்கு தலைமைதாங்க விரும்பும் வல்லரசு நாடுகள் அனைத்து வழிகளிலும் தமது நிலையினைத் தக்க வைப்பதற்கு, அதற்கான சாத்தியக்கூறுகளை பயன்படுத்தியே வருவர்.

உயர நிற்கும் வல்லரசு நாடுகளின் உயரத்தை நோக்கி மற்றைய நாடுகள் வளரும் போது அதை அவதானிக்கும் வல்லரசு நாடுகள் அதனைத் தடுத்து நிறுத்த அதன் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் அனைத்து அலகுகளையும் சிதைக்கவே முயற்சிப்பர்.

தொழிற்சாலைகள் என்பது ஒரு நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பின் ஒரு அலகாகும். தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களின் தரமென்பது மிகவும் முக்கியமானதாக கவனிக்கப்படும்.

ஒரு நாட்டினுடைய முப்படைகளின் காத்திரத்தை அறிவது மட்டுமல்ல உளவு நிறுவனங்களின் வேலை. ஒரு நாட்டினுடைய வளமான பொருளாதாரக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதன் மூலம் பொருளாதாரத்தின் கட்டமைப்பில் தக்க வைத்துக் கொண்டிருக்கும் அரச நிர்வாகத்தையே ஆட்டம் காண வைப்பதுதான் உளவு நிறுவனங்களின் பிரதானமான வேலையாகும்.

பொருளாதாரக் கட்டமைப்பு என்பது ஒரு ஆணி வேர் போன்றது. மண்ணைத் துளைத்து ஆழமாக வேரூன்றி நிற்கும் ஆணிவேர்தான் ஒரு மரத்தை ஆட்டம் காணவைக்க முடியாதவாறு உறுதியாக தாங்கிப் பிடித்து உதவுகிறது.

அதைப் போல நாட்டு வளங்கள் பலவற்றின் மூலக்கூறுகளாக இருந்து ஒருமித்த ஒரு திண்மமாக நிற்கும் பொருளாதாரக் கட்டமைப்பு ஒரு நாட்டுக்கு முக்கியமாகிறது. இந்தப் பொருளாதாரக் கட்டமைப்புத்தான் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மகிழ்ச்சியான நிம்மதியான வாழ்வைக் கொடுக்கின்றது. ஒரு நாடு தனது வளங்களாக இயற்கையாக கிடைக்கின்ற நீர்வளம், நிலவளம், கனிம வளங்கள் போன்றவற்றை தமது பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்துகின்றன.

பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டினுடைய அரச இயந்திரத்தை எவ்வித தடையுமின்றி நடத்திச் செல்வதற்கு முக்கிய கருவியாக இருக்கின்றது.

அதே போல அறிவியலின் துணையுடன் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் மக்களின் தேவைகளுக்காகவும்,வெளிநாட்டு வருவாயினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் எற்றுமதி செய்யப்படுகின்றன.

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தரமும் அதனை பெருபான்மையான மக்கள் வாங்கக்கூடிய விலையில் அவை இருக்கும் போது உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தொகை அதிகரிக்கின்றது.

எக்காலத்திற்கும் உலகில் உள்ள நாடுகள் தமது நாட்டை வளர்ச்சியடையாத நிலையில் தொடர்ந்தும் வைத்திருக்க மாட்டார்கள்.

காலத்திற்குக் காலம் அந்தந்த நாடுகளின் தோன்றும்



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
CHF 89
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
CHF 64
14 மாதங்கள்
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
CHF 6.99
மட்டுமே
chromecast
SMART TV
LG Smart
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்
SALES
077 955 9430
CUSTOMER SERVICE
044 555 2320
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

உற்பத்திப் பொருட்களின் தரத்தை சீர்குலைப்பதில் உளவு நிறுவனங்களின் ஒற்றர்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள். இந்த உற்பத்திப் பொருட்கள் இராணுவத்திற்கு தேவையான ஆயுதங்களிலிருந்து மனித வாழ்விற்கு தேவையான அனைத்துப் பொருட்களுமாக வேறு வேறு தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன.

இந்த உற்பத்திகள் யாவும் உற்பத்தியாளர்களுக்கும் வாங்குவோருக்கும் இடையில் மட்டுமே தொடர்புடைய வியாபாரம் அல்ல,அது அந்த நாட்டினுடைய நிதியின் பெறுமதியையும் பொருளாதார இறுக்கத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்கான அத்திவாரமுமாகும்.

இவ்வாறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் உதாரணமாக உணவு உற்பத்தியில் ஈடுபடும் ஒரு தொழிற்சாலை வல்லரசு நாடுகளின் உதவி பெற்று தனது தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேளைகளில் அந்நாடுகளிலிருந்து வரும் தொழிற்துறைசார் தொழில்நுட்பவியலாளராகட்டும், உற்பத்திப் பொருளின் தரத்தை நிர்ணயிப்பவர்களாக இருக்கட்டும் அவர்களை தமது நாட்டுக்கான ஒற்றர்களாக பயன்படுத்திக் கொள்ளவதை ஒரு வேலைத்திட்டமாகவே அந்த நாடுகள் கொண்டிருக்கின்றன.

இக்கட்டுரையின் எட்டாம் பகுதியில் விளக்கப்பட்டதற்கு அமைய ஒரு உணவு உற்பத்தித் தொழிற்சாலைக்கு நவீன உற்பத்தித் திறனை அறிமுகப்படுத்த வரும் வல்லரசு நாடுகளின் அதிகாரிகள் அந்தந்த பொருட்களின் உற்பத்தித் துறைசார் கல்வியில் தகுதிவாய்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பதில் அந்த நாடுகள் அதிக கவனம் செலுத்தும் ஏனெனில் தகுதி உள்ளவர்களின் அறிவியல் ஆற்றலை தொழிற்சாலைகளின் சுதேச அதிகாரிகள் மிகவும் உற்றுக் கவனிப்பபார்கள் என்பதற்காகவே.

அதே வேளை வல்லரசு நாடுகளில், அதே தொழில்சார் துறையைக் கற்றவர்கள் அனைவரும் தமது நாட்டுக்கு தொழில்சார்ந்த ஒற்றர்களாக பணியாற்ற சம்மதிக்க மாட்டார்கள்.

அதற்கான விருப்புள்ள சிலரை மட்டுமே தெரிவு செய்து எப்படியெல்லாம் இரகசியங்களை அறிய வேண்டுமென்பதற்கான பயிற்சிகளைக் கொடுத்து அனுப்பி வைப்பார்கள். வல்லரசு நாடுகளிலிருந்து அனுப்பப்படும் அனைத்து தொழிற்துறை சார் தொழில்நுட்பவியலாளர்களோ உற்பத்தி தரநிர்ணய அதிகாரிகளோ ஒற்றர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களில் ஒருவர் அல்லது இருவரே ஒற்றர்களாக இருப்பார்கள்.

ஒற்றர்களாக வேலை செய்பவர்கள் தம்மை ஒற்றர்கள் என்று தம்மோடு தனது நாட்டிலிருந்து வந்த அதிகாரிகளுக்குக்கூட தெரியப்படுத்த மாட்டார்கள். சந்தேகப்படும்படி சிறு அசைவுகளைகூட வெளிப்படுத்த மாட்டார்கள்.

உதாரணமாக ஒரு உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் என்னென்ன, அவை எங்கிருந்து கிடைக்கின்றன.அந்த மூலப் பொருட்களில் உள்ளடங்கியுள்ள வேதியல் கூறுகள் என்னென்ன, அந்த வேதியல் பொருட்கள் மனித உடலுக்கு எவ்வாறு எந்த உறுப்பின் செயல்பாட்டுக்கு தேவைப்படுகின்றது என்பதை அக்கு வேறு ஆணி வேறாக ஒற்ற அதிகாரிகள் கண்டறிவார்கள்.

ஒரு நாட்டினுடைய மிக முக்கியமான வளமாக கருதப்படுவது மனித வளமே. மனித வளம் என்பது நோயற்ற ஒவ்வொரு தனிமனிதனையுமே குறிக்கும்.
நோயற்ற மனிதனாக வாழ்வதற்கு உணவும், அந்த உணவிலுள்ள உடலுக்குத் தேவையான வேதியல் மூலக்கூறுகளுமே அத்தியாவசியமாகின்றன.

நவீன உலகம்,தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட உணவுகளிலேயே தங்கிநிற்கின்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உளவு நிறுவனங்கள் இச்சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்தவதைத் தவிர்க்கவே மாட்டார்கள்.

தொழிற்சாலையிலிருந்து ஒரு உணவு தயாரிக்கப்படும் ஒரு காய்கறியிலிருக்கும் வேதியல் மூலக்கூறுக்கும் அதனைப்பதப்படுத்த பாவிக்கும் வேதியல் பொருளுக்கும் இடையில் இருக்கும் சாதக பாதக விளைவுகளையே தொழிற்சாலைகள் முதலில் கவனத்தில் கொள்கின்றன.
ஒற்றர்களாக பணியாற்றும் அதிகாரிகளின் கவனம் இங்கிருந்துதான் ஆரம்பிக்கும்.

- (தொடரும்)

# GENERALI

## Mathan Selvaratnam

**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern

☎ 058 473 24 45    🖷 058 473 32 29

email : mathan.selvaratnam@generali.com

www.generali.ch



www.generali.ch

076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

## 'இலக்கியக் கலாநிதி' 'பண்டிதமணி'

# சி.கணபதிப்பிள்ளை



### ஈழத்து தமிழ் அறிஞர்கள் –02

– வண்ணை தெய்வம்

யாழ்ப்பாணத்தின் கிழக்கே உள்ள தென்மராட்சியின் முக்கிய நகரமான சாவகச்சேரியில் இருந்து உள்ளே மூன்று கி.மீற்றர் தொலைவில் உள்ளதுதான் மட்டுவில்க் கிராமம். இங்கு பிறந்து வளர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கும் தனங்கிளப்பைச் சேர்ந்த வள்ளியமமைக்கும் நடைபெற்ற திருமண உறவால் 1899ம் ஆண்டு ஆனி மாதம் பிறந்தவர் தமிழறிஞர் சி.கணபதிப்பிள்ளை அவர்கள்.

இவருடைய சிறு வயது கல்வி என்பது சீரானதாக இருந்தில்லை! பிறந்த ஊரான மட்டுவிலிலும் பின்பு தாயாரின் ஊரான தனங்கிளப்பிலும் அங்கும் கிரமமாக பள்ளிக்கூடம் செல்வதற்கான சூழ்நிலைகள் இல்லை!. தொடர்ந்து தென்மராட்சியில் அந் நாட்களில் தமிழில் புலமை பெற்று விழுங்கிய பொன்னம்பலம்பிள்ளை என்பவரிடமுமாக தனது சிறு வயது கல்வியைக் கற்று வந்தவர். 1917ம் ஆண்டு சுன்னாகம் நாவலர் காவியப் பாடசாலையில் சேர்ந்தார். அப் பாடசாலையில் குமாரசாமிப் புலவர் மற்றும் முருகேச பண்டிதர் ஆகியோர் இவரின் தமிழ் ஆசான்களாக இருந்ததனால் கணபதிப்பிள்ளை அவர்களும் தமிழை நன்கு நேசித்து ஆழமாக கற்கலானார். அந்த ஆர்வம் அவரை தமிழில் பண்டிதர்களுக்கெல்லாம் மகுடம் தாங்கியவராக 'பண்டிதமணி" என்னும் சிம்மாசனத்தில் அமர்த்தியது.

தமிழறிஞர் ஆறுமுகநாவலருக்குப் பின் போற்றப்பட்ட தமிழ் அறிஞர்கள் வரிசையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் முக்கியமானவராவார். விவசாயிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது சொல்வார்கள் 'இவர்கள் தங்கள் விரல்கள் ஐந்தையுமே ஆயுதமாகக் கொண்டு வாழ்பவர்கள்" என்று. அதுபோல எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தமிழ் நிதியங்களையும் ஓதி உணர்ந்தவர் பண்டிதமணி அவர்கள்!.இலக்கணச் சுத்தமும், இலக்கியச் சிந்தனையும் இழையோடிக்கொண்டிருந்த யாழ்ப்பாணத் தமிழ் மரபிற்கு பண்டிதமணி போன்றவர்கள் வேர்களாகவும் நிழல்களாகவும் இருந்தார்கள் என்பதுதான் நிதர்சனமாகும்.

இன்று நல்ல தமிழ் அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களின் தமிழ் அறிவுக்குக் காரணமானவர்களில் பண்டிதமணியும் இருப்பார் என்பதில் சந்தேகம் இருக்காது. இத்தனைக்கும் நகைச்சுவையாகப் பேசுவதில் பண்டிதமணிக்கு இணையாக இன்னொருவரைக் குறிப்பிடுவது மிகவும் சிரமமானதாகும். கவிதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள், கதைகள், சிலேடைக் கருத்துக்கள் இவையெல்லாம் அவருடைய பேச்சுக்களுக்கிடையே இயல்பாகவே கும்மாளமடித்தபடியே இருக்கும் என காலம் சென்ற அமுதுப்புலவர் அவர்கள் இவர் பற்றிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்திமஹால் மண்டபம்

சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...












**திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா**

அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K. Kowthaman | S. Manivannan | K. Vijayasuresh |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

Web: www.varasithy-mahall.ch | E-Mail: varasithymahall@hotmail.com

இவருடைய தமிழ்ப் பேச்சைக் கேட்பதற்கு முன்னர் இவரைப்பார்த்தாலே தனி மரியாதை உருவாகும்! தமிழ் அறிவில் மட்டுமல்ல ஆளும் உயரமானவர்தான்! சிவந்த மேனி. பால் நிறத்தில் வெள்ளை வேட்டி, அதே வெள்ளையில் மேற்சட்டை, தோழில் சால்வை இப்படியாக அவரைப் பார்த்ததுமே தனி மரியாதை வந்துவிடும். தமிழ் அரங்கங்களில் இவர் குரல் ஒலித்தால் அதை ரசிப்பதற்கென்றே ஒரு ரசிகர் பட்டாளம் இருந்தது. குறைந்தது ஒரு மணித்தியாலமாவது பேசுவார். பேச்சு முடிந்ததும் 'ஐயோ பண்டிதர் பேச்சு முடிந்துவிட்டதே" என பலரும் பெரு மூச்சு விடுவார்களாம்!. இப்படியாக 'இலக்கியமணி" கனக செந்திநாதன் அவர்கள் எழுதிய 'மூன்றாவது கண்" என்னும் நூலில் பண்டிதமணியைப்பற்றி பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

கற்களெல்லாம் சிலைகளாவதில்லை! சொற்களெல்லாம் கவிதைகளாவதுமம் இல்லை! சிறந்த சொற்கள் உரிய முறையில் புலப்படுத்துபோதுதான் அங்கே கவிதை தோன்றுகின்றது… இலக்கியம் துளிர் விடுகின்றது… அறிவியல் அறிஞன் ஒருவனுக்கு காகம் ஒரு பறவை… குருவியும் ஒரு பறவையே…! கல்லு மணலால் உருவானது மேடு! கடல் என்பது ஒரு நீர் நிலையம். ஆனால் இலக்கிய உணர்ச்சி பெற்றவனுக்கு இவை அனைத்தும் சொந்த பந்தங்களாகின்றன! இதனால்த்தான் காக்கை குருவி எங்கள் சாதி என்றான் பாரதி!

பண்டிதமணி அவர்கள் பண்டிதர் பட்டம் பெற்றதும் ஒரு வரலாற்றுப் பதிவே! தமிழ்ப் புலமையை நிறைவாகப் பெற்றுக்கொண்ட கணபதிப்பிள்ளை அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம் 1925ம் ஆண்டு நடாத்திய பண்டித பரீட்சைக்குத் தோற்றி மிகத் திறமையுடன் சித்தியடைந்தார். இதன் மூலம் இலங்கையிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதப் பட்டம் பெற்றவர்கள் வரிசையில் ஐந்தாவது இடத்தைப் பெற்றார்.

முதலாவது இடத்தை மட்டக்களப்பைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவரும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை புலோலி வ.குமாரசாமிப் புலவரின் பேத்திகளான பாலாம்பிகை, பத்மாசனி ஆகியவர்களும் நான்காவது இடத்தை வவுனியாவைச் சேர்ந்த டேவிற் இராசையா என்பவரும் ஏற்கனவே பெற்றிருந்தார்கள். ஆனாலும் யாழ்ப்பாணத்தில் பண்டிதர் பட்டம் பெற்ற முதலாவது ஆண்மகன் கணபதிப்பிள்ளையே என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த கணபதிப்பிள்ளை அவர்களுக்கு பாராட்டுவதற்காக நடைபெற்ற விழாவிலே இவர் ஆரம்பக் கல்வி கற்ற காவியப் பாடசாலையின் முகாமையாளரான கைலாசபிள்ளை அவர்கள் பொற்பதக்கம் சூட்டிக் கௌரவித்திருந்தார். அவ்வாறே மட்டுவிலில் நடைபெற்ற பிறிதொரு விழாவில் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்கள் பொற்பதக்கம் சூட்டிக் கௌரவித்திருந்தார்.

பண்டிதர் படிப்பைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு திருநெல்வேலி சைவாசிரிய கலாச்சாலையில் 1929ம் ஆண்டு விரிவுரையாளராக தனது தமிழ்ப் பணியை ஆரம்பித்தவர் 1959ம் ஆண்டே ஓய்வு பெற்றார். பதவியில் இருந்து ஓய்வு பெற்ற போதிலும் கலாசாலை வீதியில் அமைந்திருந்த தமது இல்லத்தில் இருந்து கொண்டு தமிழ்ப்பணியும், சமயப்பணியும் செய்து கொண்டே இருந்தார்.

யாழ்ப்பாணம் கந்தபுராண கலாச்சாரத்தில் ஊன்றித் திளைத்த பிரதேசமாகவே விளங்கி வந்துள்ளது. ஆறுமுகநாவலரால் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இக் கலாச்சாரத்தை அவரின் ஞானப்பரம்பரையில் வந்த பண்டிதமணி அவர்கள் தனது பேச்சாலும் எழுத்தாலும் மேலும் ஆழமாக நிலைநாட்டிச் சென்றுள்ளார்! எண்ணற்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், எண்ணற்ற கட்டுரைகளை எழுதியும் இவர் கந்தபுராண கலாச்சாரத்தை விளக்கியுள்ளார்.

இவருடைய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து 'கந்தபுராண கலாச்சாரம்" என்னும் பெயரில் வெளியிடப்பட்ட நூலில் காணப்படுகின்றது. அவ்வாறே 'கண்ணுாறு" என்னும் கட்டுரையிலே ஆறுமுக நாவலருக்கு சைவ சித்தாந்த உணர்ச்சி கந்தபுராணத்தில் இருந்துதான் வந்தது என்ற தனது கருத்தையும் ஆழமாகப் பதிவு செய்திருக்கின்றார்.

பண்டிதமணி அவர்கள் எழுதிய இன்னொரு சமயநூல் 'கந்தபுராண போதனை" என்பதாகும். கந்தபுராணத்தின் சிறப்புகளைக் கூறும் இந் நூலில் அதன் தஷ்ண காண்டத்திற்கு சிறப்பான உரையும்

உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்

- Reifenwechsel
- Auto Diagnostik
- Karosserie
- Klimaservice
- MFK Bereitstellung
- Bremse und Stossstange
- Autoradio Montage
- Reinigung und Polieren
- Sonstige Reparaturen
- Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

எழுதியுள்ளார். பண்டிதமணியால் காலத்திற்குக் காலம் எழுதப்பட்ட சமயக் கட்டுரைகளில் சில தொகுக்கப்பட்டு 'சைவ நற்சிந்தனை" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றது. மேலும் இவரால் எழுதப்பட்ட 'கதிர்காம வேலன் பவனி வருகின்றான்" என்ற நூலும் வெளிவந்திருக்கின்றது.

ஆறுமுக நாவலரைப் பற்றிய பல உண்மைச் சம்பவங்களைக் கட்டுரைகளாக எழுதி வந்த பண்டிதமணி அவர்கள் சேற்றூர் அருணாசலக் கவிராயர் பாடிய ஆறுமுக நாவலர் என்னும் செய்யுள் நூலைத.கைலாசபிள்ளைஅவர்களின்முகவுரையுடன் நூலாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளதுடன் 'யாழ்ப்பாணத்துச் சமயநிலை" என்னும் தலைப்பில் நாவலரால் எழுதப்பட்ட கட்டுரையைத் தனி நூலாக மறுபிரசுமும் செய்துள்ளார்.

பண்டிதமணியால் எழுதப்பட்ட இலக்கியக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'இக்கியவழி" என்னும் நூலாக வெளிவந்திருக்கின்து. அந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் தூய இனிய நடையிலே எழுதப்பட்டு தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒப்பற்ற இலக்கிய விருந்தாக அமைந்திருந்தது.

இந்நூலை சென்னையில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'இந்து" (Madras Hindu) மிகச் சிறந்ததொரு மதிப்புரை எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். சமய இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதோடு சிறுகதை, நாவல், நாடகம் போன்ற நவீன இலக்கியத்துறையிலும் கால் பதித்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு உழைத்த இவர் பிரபல ரூஸ்ய நாட்டு இலக்கிய மேதையான டால்ஸ்டாயின் கதைகள் இரண்டினைத் தழுவி 'செருப்புக்கட்டியின் கதை" 'இரு யாத்திரீகர்" என்னும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவைதவிர 'இரு சகோதரர்கள்" என்னும் நாவலும் இவருடைய படைப்புக்களில் ஒன்றாகும்.
பண்டிதமணியின் பரந்துபட்ட தொண்டுகளைப் பாராட்டும் வகையில் இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்கு 'இலக்கியக் கலாநிதி" என்னும் கௌரவ பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. மேற்படி பட்டமளிப்பு விழாவானது பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

தமிழிற்கு சிறப்பும், மதிப்பும் சேர்த்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் 1986ம் ஆண்டில் கலாசாலை வீதியில் அமைந்திருந்த தமது வீட்டில் 87ம் வயதில் அமரத்துவம் அடைந்தார். அன்னார் மறைந்து முப்பத்திரண்டு வருடங்கள் மறைந்தாலும் தமிழ் மறையாது என்பதற்கு சாட்சியாக பண்டிதமணியின் பெயர் இன்னமும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றது.



SwissLife
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

**சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.**

**உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்...**
















## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்.

**Sägestrasse 79**
**3098 Köniz**

Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch
Internet: www.swisslife-select.ch

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

பாகம் - 74




**- அன்புச் செல்வன்**

2வது உலகப் போரின் முடிவில் உலக வல்லரசுகள் ஒரு பொதுவான இலக்கை மையமாக வைத்து தமது நாடுகளுக்கிடையே பரஸ்பர உறவுகளை வடிவமைத்துக் கொண்டன. தொடக்கத்தில் அவர்கள் வெற்றி பெற்ற நாடுகளின் வளங்களை அபகரிப்பதில் கவனம் செலுத்தின.

யேர்மனிய நாட்டின் இராணுவ பலத்தை மீண்டும் தலைதூக்க விடாது தமது இராணுவ ஒப்பந்தங்களை செய்து கொண்டன. முக்கியமாக கிழக்கு ஜேர்மனியை ரசியா தன்னுடன் இணைத்துக் கொள்ள அண்டை நாடு என்ற வகையிலும் தன்னாட்டின் பாதுகாப்புக் கருதியும் நியாயப் படுத்துவது தவிர்க்க முடியாது.
ஆனால் பல்லாயிரம் மைல்களக்கும் அப்பால் இருக்கும் அமெரிக்கா தேமற்கு ஜேர்மனியைத் தனது ஆளுகைக்குள் வைக்கவும் அங்கே தனது படைகளை இன்று வரை வைத்திருக்க ஒப்பந்தம் செய்ததை எப்படி நியாயப்படுத்த முடியும்?
அதற்கு அது வைத்துக் கொண்ட வாதம் மீண்டும் ஒரு ஹிட்டலர் வந்து விடக் கூடாது. அதனால் அதற்கான காரணமாக அமைந்த இன வாதம் தேசிய வாதம் என்பன கெட்ட வார்த்தைகளாக உலகம் எங்கும் சினிமாக்கள் தொலைக் காட்சி பத்திரிகை ஊடகங்கள் மூலம் பிரச்சாரப் படுத்தி யேர்மனியில் தேசியம் இனம் பற்றிய பேச்சே எழ முடியாதவாறு அரசியல் மறைமுக கட்டுப் பாட்டுக்குள் வைக்கப்பட்டு வந்துள்ளது.

இப்பொழுதுதான் பாரம்பரிய யேர்மானிய கட்சி என்ற பெயரில் உருவான கட்சி பலம் பெற்று வருகிறது. 2ம் உலகப் போருக்குப் பின்னர் அங்கு கூட்டணிக் கட்சிகளே ஆட்சி செய்ய முடிந்தது என்ற நிலைமைக்கு இத்தகைய சர்வதேச அரசியல் நிர்ப்பந்தங்களே காரணம் எனலாம்.

2ம் உலகப் போரின் பின்னர் எந்த ஒரு நாடும் தேசிய விடுதலை பெற வேண்டும் என்றால் அவற்றை அமெரிக்காவோ அல்லது சீனாவோ இந்தியாவோ தமது நலன் கருதி ஊக்கு வித்தால் அல்லாமல் விடுதலை பெற முடியாது. அகச் சூழல் தேசிய எழுச்சியை இளங்களின் விடுதலையைக் கட்டாயப் படுத்தினாலும் ஏதாவது ஒரு வல்லரசின் புறச் சூழல் இல்லாது போனால் அந்நாட்டு மக்களுக்கு உறுதியாக விடிவே கிட்டாது என்பதற்கு பாலஸ்தீன மக்களின் வரலாறு ஒரு சிறந்த உதாரணம்.

எத்தனையோ இஸ்லாமிய நாடுகள் ஐ.நா. சபை உறுப்பினராக இருந்தும் கூட இஸ்ரவேல் என்ற குட்டி நாட்டின் பண படை ராஜதந்திர பலத்தை மீறி 70 வருடங்களாக பலஸ்தீன மக்கள் விடுதலை பெறமுடிய வில்லை என்பதும் பல வருடங்களாகப் விடுதலைக்காகப் போராடித் தோற்கடிக்கப் பட்ட நைஜீரியா மற்றும் ஒரு உதாரணம்.

அந்த வரிசையில் தாயகம் தேசியம் தன்னாட்சி உரிமையுடன் 1830 வரை இருந்த ஈழத் தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளும் உரித்துகளும் சிங்களத்தால் பறிக்கப் பட்டு சர்வதேச சுரண்டலால் அனைத்து வளங்களும் இழந்து நிற்கிறது. பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை விடுதலை பெற்ற பொழுதே

தமிழ் மக்கள் தமது தாயக இன அடையாளங்களை வலியுறுத்தி பாகிஸ்தான் போன்று போராடியிருந்தால் தமிழ் இனம் இந்த அளவுக்கு அழிவுகளை எதிர் கொண்டிருக்க முடியாது.

தமிழ் இனம் இலங்கையில் நீடித்து வாழ வேண்டும் என்றால் சிங்களத்தின் தமிழ் இன அழிப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அதன் தாயக தேசமும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள தன்னாட்சி அதிகாரமும் சர்வ தேச சட்டங்களுக்கு அமைவாக உலக அரசுகளால் அங்கீகரிக்கப் பட வேண்டும்.

அத்தகைய ஒரு அங்கீகாரத்தை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிறுவிய அரசுக்கு பெற்றுக் கொள்வதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அசியல் அமைப்பை ஏற்படுத்தி மக்கள் ஆதரவைப் பெற வைத்து பாராளுமன்றத் தேர்தல் மூலம் உலக அங்கீகாரத்துடன் தனித் தமிழீழ தாயகத்தை மீட்டு எடுக்க முனைந்தது.

ஆனால் பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிவிட்டது என்பது போல் அதே கூட்டமைப்பு தமிழின அழிப்பை ஊக்குவித்தும் போருக்குப் பின்னரும் கூடத் தமிழரின் நியாயமான அரசியல் உரிமைகளை பெறாமல் ஆக்கிரமிப்பு அடிமை அசியலுக்குள் தமிழ் மக்களை மூழ்கடித்து வருகிறது.

தமிழ் மக்கள் தன்மானத்துடன் பாதுகாப்பாக வாழவும் முடியாது தமிழ் தேசியம் பேசி தனித்து ஆட்சி அமைத்து வாழவும் முடியாத திரிசங்கு நிலையில் தவிக்கிறது. தமிழ் இனத்தின் மீது நடத்தப் பட்ட கொடுமைகளுக்கும் இன அழிப்புகளுக்கும் எந்த விதமான நீதியான விசாரணையோ நேர்மையான இழப்பீடுகளோ பெற முடியாமல் இருப்பதற்கும் அப்பால் பறிக்கப் பட்ட தனியார் நிலங்களும் சொத்துக்களும் மீளப் பெறமுடியாமலும் கடுமையான இராணுவ அடக்குமுறைகளுக்கு இன்னமும் உள்ளாக்கப் படும் நிலையே தொடருகிறது.

இவற்றுக்கு நிலையான நீடித்த தீர்வாக தனித் தமிழ் ஈழம் என்ற பிரிவினை ஒன்றுதான் உள்ளது. ஆனால் அத்தகைய ஒரு அரசியல் தீர்வைப் பெற வேண்டுமானால் 1830ல் பிரித்தானியப் படைகளால் எம்மிடம் இருந்து பறித்து 1947ல் சிங்கள இனத்திடம் கையளிக்கப் பட்ட எமது தாயகம் தேசியம் தன்னாட்சி அதிகாரங்களை நாம் மீட்டு எடுப்பது கட்டாய தேவையாகிறது. இப்பொழுது வெளியாகும் போர் தொடர்பான செய்திகளை நோக்கும் பொழுது இந்தியா உட்பட பல வெளிநாகள் தமது பொருளாதார இராணுவ பிராந்திய தேவைகளை முன்னிட்டு எமது நியாயமான வரலாற்று ரீதியாக இருநற்த உரிமைகளை மறுப்பதன் மூலமே மேற்படி நாடுகள் தமது சுரண்டல் ஆட்சியை நடத்த முடியும் என்ற காரணத்தாலேதான் எம்மீதான இன அழிப்புப் போர் நடத்தப் பட்டது என்பது வெட்ட வெளிச்சமாகி உள்ளது.




எமது தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மறுதலிப்பதில் எமது அண்டை நாடான இந்திய அரசுதான் மூர்க்கத் தனமாக நடந்து கொண்டதோடு தமிழின அழிப்பை முனைப்போடு நடத்தியது எனவும் எமக்கான நீதியைப் பெறுவதிலும் அதுவே பெருந் தடையாக செயற்படுகிறது எனவும் தெரிய வந்துள்ளது.

எமது தலைவர்கள் இந்தியாவின் கட்டுக்குள் சிக்கியதால் எமக்கான சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட நீதியைக் கூட நம் இனம் பெற முடியாத நிலை தொடருகிறது. ஊர் உலகத்திடம் நாம் நியாயம் தேட முன்னர் நாம் எமது தலைமகளை பொறுப்புக் கூற வைக்க வேண்டும் அல்லது அவர்களை நாம் எமது தோள்களிலிருந்து தூக்கித் தூர எறிந்து விட வேண்டும்.
உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் மூலம் மக்கள் பாதி வேலையை முடித்து விட்டார்கள். அதன் பலனாய் இன்று அவர்கள் பச்சைத் துரோகக் குழுக்களிடம் அணி சேர்ந்து விட்டார்கள். விரைவில் அவர்களை துரோகிகள் கூட்டத்தோடு மக்களே இணைத்து விடுவார்கள். இந்த அழகில் வட மாகாணசபை முதல்வராகும் ஆசையில் தேர்தலைச் சந்திக்கப் போவதாகத் தெரிகிறது. முக்கள் அவர்களுக்கு முழுக்குப் போட்டு வீதிக்கு அனுப்பினால் மட்டுமே எம் இனத்தின் விடியலும் விடுதலையும் பெற முடியம். (தேடல் தொடரும்)

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள் ? என்ர பாடு ஏதோ போகுது பாருங்கோ. வானம் வெளித்தால் உலகம் வெளிக்கும். உலகம் வெளித்தால் மக்களும் வெளிப்பினம். ஆனால் பாருங்கோ, வானம் வெளிச்சாலும் சரி, உலகம் வெளிச்சாலும் சரி நாங்கள் இருளுக்குள்ள தான் விருப்பம் எண்டால் நான் என்னதான் செய்யுறது பாருங்கோ. எங்கட ஆட்களை எவ்வளவு தான் நெறிப்படுத்தினாலும் அவை வெறிபிடிச்சுதான் நிக்கினம். அதுதான் அவையின்ர பரம்பரை தொட்டு வந்த குணம் எண்டு நிக்கினம். ஆனால் அது வந்து ஒரு பெரிய வியாதி பாருங்கோ.

அந்தக்காலத்தில் அவனவன் ஏதோ ஒரு காரணத்திற்காகச் செய்ததை , நம்மட ஆக்கள் ஏன் செய்யுறம் எண்டு தெரியாமல் செய்யுறது தான் பெரிய குழப்பங்களுக்கெல்லாம் காரணம். சொன்னால் எங்களை விசரன் எண்டுவாங்கள், சொல்லாட்டில் எங்களுக்கு விசர் பிடிச்சிரும். சமூக நடைமுறை எண்டுறது எல்லாருக்கும் பொதுவானது. அதுக்கெண்டு சில வரைமுறை இருக்குது. நீண்டகாலமாக அது அது அப்பிடித்தான் எண்டுறது தமிழருக்கான வரலாறு பாருங்கோ, நாட்செல்ல நாட்செல்ல அதை எல்லாத்தையும் நாகரிகம் எண்ட பெயர்ல அழிக்கிறதும் பணத்தாசை பிடிச்ச கூட்டம் அதை வியாபாரமாக மாற்றுறதும் சுத்தக் கோமாளித்தனம் பாருங்கோ.

விடயம் என்னவெண்டால் பாருங்கோ, ஊரிலையும் சரி, புலத்திலையும் சரி மூன்று வயது நிரம்பிய பிள்ளைகளுக்கு ஏடு துவக்குறது வழமை தானே. ஊரிலை எண்டால் பள்ளிக்கூடங்களில விஜயதசமி எண்டொரு வடநாட்டாரின்ர பண்டிகையை கொண்டுவந்து அண்டுதான் ஏடுதுவக்க வேணும் எண்டு ஒரு வலுக்கட்டாயமாக வாதம் நிலவுது பாருங்கோ. அதைத்தான் எங்கட ஆக்கள் இன்றுவரைக்கும் தொடர்ந்து கொண்டுவருகினம்.

அது உண்மையில அவசியமானதல்ல. விஜயதசமி எண்டுறதுக்கும் சைவ நெறிக்கும் ஒரு தொடர்புமில்லை பாருங்கோ. விஜயதசமி எண்டுறது இந்துமதத்தின் கொண்டாட்டம்.

சரசு, லச்சுமீ, காளி எண்டு மூன்று தெய்வமாம். அதில சரசு கல்வி தருமாம். எனக்கெண்டா சரசு எண்ட பெயரைக் கேட்டால் கல்வி வராது பாருங்கோ. அது ஒரு மார்க்கமான பெயராத்தான் எனக்குத் தெரியும். லச்சுமீ செல்வம் தருமாம். காளி வீரம் தருமாம். எங்கட சம்பந்தர் ஐயாவுக்கு மிகப்பிடிச்ச தெய்வம் காளியாம்.

ஆனால் அவருக்கும் வீரம் எண்ட சொல்லுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மூண்டு கடவுளுக்கும் ஒன்பது நாள் பூசை செய்து பத்தாவது நாள் உந்த விஜயதசமி கொண்டாடுகினம். எல்லாத்தையும் போல கடைசியில புக்கையும் அவலும் தான் கடைசியில குடுப்பினம். வேண்டித்திண்டிட்டு வரவேண்டியதுதான். இதுதான் வழமை. ஆனால் இதையே வியாபாரமாக்கினது யார்..? நம்மட ஆக்களேதான் பாருங்கோ.


PAGEVISION
Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02
www.pagevision.ch
உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்
HP dc7700 Tower
Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz
80GB Festplatte
2GB DDR2 RAM
DVD/CD-Brenner
8x USB 2.0
1 Jahr Garantie
CHF 60.- inkl. MwSt.
PC Systeme komplett ab CHF 329.-!!
Keine versteckten Kosten, alles inkl. MwSt.!
Lenovo T410 Notebook
Intel Core i5 m540 - 2x 2.53GHz
250GB Festplatte
4GB DDR3 RAM
DVD-Brenner
3x USB 2.0, USB 3.0
1 Jahr Garantie
CHF 249.- inkl. MwSt.
!! REPARATUREN ALLER MARKEN !!
IPHONEFAN
iphone Reparaturen zu günstigen Preisen!
Display gebrochen?
Home Button defekt?
Knöpfe ohne Funktion?
Mikrofon/Lautsprecher stumm?
Akku zu schwach?
Kein Problem! Wir reparieren Ihr iphone sauber, günstig und kompetent!
iphone Umbau komplett in gewünschte Farbe ab 129.-
über 20 Farben erhältlich!
www.iphonefan.ch
▶ sehr schnelle Lieferung!
▶ Hauslieferungen
▶ Vor-Ort Installationen
▶ Netzwerklösungen für Firmen
▶ Reparaturen aller Marken!
iPhone Reparaturen:
www.iphonefan.ch
Mac Pro 1.1
2x 5150 (4x 2.66GHz)
250GB Festplatte
8GB DDR2 RAM
Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM
1 Jahr Garantie
CHF 290.- inkl. MwSt.
günstige gebrauchte Computer Reparaturen aller Marken
www.pckaufen.ch
Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50
Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07
für Neuware besuchen Sie
pagevision.ch

அப்பிடித்தான் பாருங்கோ உங்கினை ஒருத்தர், தான்(தோன்றித்தனமாக) ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிச்சவர். அதுக்கு ஒரு தமிழ்ப் பெயர் வைச்சு "சங்கே முழங்கு, சாப்பிட மரவள்ளிக் கிழங்கு" எண்டு தாரக மந்திரம் எல்லாம் சொல்லி பள்ளிக்கூடம் ஆரம்பிச்சார். முதலில இலவசம் எண்டு சொல்லி பள்ளிக்கூடம் ஆரம்பிச்சவர் பிறகு அந்த நகரசபையிட்ட பள்ளிக்கூடத்தைக் காட்டி பள்ளிக்கூடம் நடத்துறதுக்கான இடத்தை இலவசமாக பெற்றுக்கொண்டார், கொஞ்ச நாளால இடத்துக்கு வாடகை எண்டு சொல்லி 2 யூரோ வாங்க ஆரம்பிச்சார். இதையெல்லாத்தையும் விட, இலங்கைப் பாடத்திட்டம் தான் கற்பிப்பன் எண்டு படிப்பிச்சார். அப்பிடியே போக போகப் போக கொஞ்ச நாளில நவராத்திரி, ஏதோ கான மந்திர் எண்டெல்லாம் கொண்டாட ஆரம்பிச்சார்.

எங்கட சனமும் கவர்ச்சியைத் தானே விரும்புறது. ஆனா பாருங்கோ மண்ணுக்காக மடிந்த மாவீரர்களின் எந்த நினைவு நாளையும் அங்க செய்யுறேல்லை. அப்பிடியே போய்க்கொண்டு இருந்தவருக்கு உழைப்புக்கு காணாமல் போட்டுதெண்டு நினைக்குறன். திடீரெண்டு திருக்குறள் போட்டி எண்டு ஆரம்பிச்சார். நல்ல விசயம். வரவேற்கிறம். அனுமதிக்கட்டணம் ஒரு பிள்ளைக்கு 20 யூரோ எண்டாராம். சரி பரவாயில்லை. யார் நடுவர் எண்டால் அவரின்ர மனிசியும், மனிசியின்ர தங்கச்சி, அவரின்ர மகள். அதையும் விடுவம். போட்டியில பங்கு பற்றின பிள்ளையள் ஒப்பிச்ச திருக்குறளில சிறப்பான திருக்குறள் "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன், நிலமிசை நீடு வாழ்வார்" எண்டதுதான். அந்தப்பிள்ளைக்குத் தான் சிறப்புப் பரிசு கிடைச்சதாம். ஏன் எண்டால் அந்தப் பிள்ளையின்ர தகப்பன் தான் அவருக்கு பள்ளிக்கூடம் நடத்த இடம் இலவசமாக எடுத்துக் குடுத்ததாம். நல்ல காலம் திருவள்ளுவர் உயிரோட இல்லை. இருந்திருந்தால் அந்த இடத்திலேயே தன்ர தலையை எங்கயாவது தூணில அடிச்சுத் தற்கொலை செய்திருக்கும். இல்லையெண்டால் உப்பிடியான ஆக்களுக்காக "பணத்துப்பால்" எண்டு மேலதிகமாக ஒரு அதிகாரமே எழுதியிருக்கும் .

பிறகு மொழிப்புலமை எண்டு ஒரு போட்டி நடத்திறாராம். அதில எழுத்துப்பிழை எல்லாம் சாதாரணம். தமிழ் எண்டுறதை தமழ் எண்டு எழுதினாலும் அரைப்புள்ளி போட்டுக்குடுப்பாராம். உது பிழையல்லோ எண்டு கேட்டால், ஒரு கொம்பு மட்டும்தானே இல்லை எண்டுவாராம். வாயில நல்லா எனக்கு வருகுது பாருங்கோ. அது கொம்போ கம்போ தமிழ் சரியாகப் பேணப்பட வேண்டும் எண்டுறதில எவனாவது வியாபாரத்திற்காக விட்டுக்கொடுப்பனே. இல்லை தெரியாமல் கேக்குறன், உப்பிடியானவருக்கு நெல்லை அவிச்சுக் குடுத்துப்போட்டு, உள்ளுக்கு இருக்கிறது அரிசிதானே எண்டால் ஏற்றுக்கொள்ளுவரோ. உழைப்புக்கு வழியில்லை எண்டால், ஊர்வாயில மண்போடுறதே வேலை, இல்லை தெரியாமல் கேக்குறன். தமிழ் தமிழ் எண்டு சாகிறவன் எல்லாமே தமிழையே சாகடிக்கிறான் எண்டுறதுதான் முழுக்க நடக்குது பாருங்கோ. ஒலிவாங்கியைப் பிடித்து தமிழில் ஒன்று, இரண்டு மூன்று என்று சொல்லத்தெரியாமல், இண்டு வரைக்கும் "செக்" பண்ணுற உந்த மேதாவி தமிழ் வளர்த்தால் என்ன நடக்கும் எண்டு நீங்களே கணக்குப் போட்டுப்பாருங்கோ.

சரி, உதையெல்லாத்தையும் விட இப்ப ஆள் பண்ணுற வியாபாரம் மிகப்பெரிய வியாபாரம் பாருங்கோ. அதைத் தாங்க முடியாமல் தான் அங்க பிள்ளையைப் படிக்க அனுப்பின ஒருத்தர் எனக்குச் சொல்லி விசும்பினவர். என்னெண்டால் பாருங்கோ, உந்த ஏடு துவக்குற விசயம் இருக்குதானே. அதில உவர் கில்லாடி பாருங்கோ. போன வருசம் சிலர் பிள்ளைகளுக்கு ஏடு துவக்க இடம் தேடி அலைஞ்சிருக்கினம். அந்த விசயம் நம்மட வியாபாரியின்ர காதுக்கு எட்டீட்டுது பாருங்கோ. உடனே நம்மட ஆள் போட்டார் ஒரு திட்டம். என்னவெண்டால், ஒரு பிள்ளைக்கு ஏடு துவக்க 150 யூரோ. அதோட தான் எழுதித்தாற பொருள் எல்லாம் வாங்கி வரவேணும் எண்டுறது மேலதிக விதி. அந்த வாங்கவேண்டிய பொருள் பட்டியலில ஒரு வெட்டி , ஒரு சேலை, உட்பட அரிசி மற்றும் மரக்கறி வகைகளும் உள்ளடக்கம். உதில வேட்டி மற்றும் சேலை எதுக்கெண்டு யாரும் கேக்கப்படாது.

வேட்டி அவருக்கு சேலை அவரது பாரியாருக்கு எண்டுறது மறைமுகமாக "தட்சணை" என்று பெயரிடப்பட்டிருந்ததாம். சரியெண்டு எல்லாரும் குறித்த பொருட்களோட வந்து சேர்ந்திட்டினம். நம்மட ஆக்கள் சாமி, கடவுள் எண்ட சொற்களுக்கு சரியான பயம் கண்டியளோ. அதால ஏடு துவக்குறதுக்கான சகல தட்சணையோட அங்க வந்திட்டினம். ஏடு துவக்கியது அவரும் அவரின்ர பாரியாரும் சேர்ந்துதான் பாருங்கோ. ஏடு துவக்கி முடிய தட்சணையும் காசும்

எல்லாரும் குடுத்திட்டினம். அதில ஏடு துவக்க முதலே சொல்லிவைச்ச ஒரு குடும்பம் ஏதோ ஒரு காரணத்தால ஒரு மணிநேரம் பிந்தித்தான் வந்தவையாம். அவை வந்து தாமதத்துக்கான காரணத்தைச் சொல்லி, தங்கட பிள்ளைக்கு ஏடு துவக்கச் சொல்லிக் கேட்டிருக்கினம். உடனே நம்மட ஆள் குழம்ப வெளிக்கிட்டிட்டுட்டாராம். ஏடு துவக்கிறதுக்கு ஒரு நேரம் இருக்கு. அந்த நல்ல நேரம் இப்ப முடிஞ்சுது எண்டு போட்டு, ஆனால்... எண்டு இழுத்தாராம். என்ன ஆனால், சொல்லுங்கோ எண்டு அந்தப் பெற்றோர் கேக்க, சரி பரவாயில்லை, நீங்கள் ஒரு 250 யூரோ தாங்கோ, நான் விசேட பூசை ஒண்டு செய்துபோட்டு ஏடு துவக்குறன் எண்டு சொல்ல பெற்றோருக்குத் தூக்கி வாரிப் போட்டுட்டுது. உதென்னடா நல்ல நேரம் போட்டுது எண்டார், இப்ப நூறு யூரோ கூடக் குடுத்தால் நல்ல நேரம் திரும்பி வந்திடுமோ எண்டு பெற்றோர் மனசுக்க முணுமுணுத்துக்கொண்டு சரி போனா போகுது எண்டு காசைக் குடுத்து ஏடு துவக்க வைச்சிருக்கினம்.

முதலில பாருங்கோ உந்தப் பெற்றோருக்கு வெளுக்கவேணும். ஏனெண்டால் உப்பிடியான ஆக்கள் இருக்கிற படியால் தான் உந்த ஏடு துவக்கியளுக்கு வசதியாகப் போகுது. காசு குடுத்து நல்ல நேரம் வரவழைச்ச யாரையும் இதுவரைக்கும் கேள்விப்பட்டிருக்கிறியளே ..? உப்பிடிதானே கன காலமா ஏமாத்துறார் எங்கட சிங்கராசா. இதில தமிழையும், இந்துசமயத்தையும் போட்டுக் குழப்பி அதில ஒரு வியாபாரம், பிறகு திருக்குறளை வைச்சு ஒரு வியாபாரம், ஏடு துவக்கி ஒரு வியாபாரம், எண்டு ஆள் இப்ப கொடி கட்டிப் பறக்குது பாருங்கோ. உப்பிடி ஊரைச் சுத்தி உலையில போடுற பிழைப்புக்கு பிச்சை எடுக்கலாம் கண்டியளோ. உதெல்லாம் ஒரு பிழைப்பு, உமக்கெல்லாம் ஒரு பள்ளிக்கூடம். தமிழனும் தமிழும் எங்கபோனாலும் பிழைக்க முடியாது. ஆனால் அதை வைச்சுப் பிழைக்கிறவன் இப்ப ஏராளம் பேர் உருவாகிக்கொண்டு இருக்கிறாங்கள் எண்டதுதான் பெரிய கேவலமாய்க் கிடக்கு பாருங்கோ.

**நாணமுன்னு வெட்கமுன்னு**
**நாலு வகை சொன்னாங்க**
**நாலும் கெட்ட கூட்டம் ஒண்ணு**
**நாட்டுக்குள்ளே இருக்குதுங்க**
**ஆன வரை சொன்னெங்க அடிக்க தானே வந்தாங்க**
**அத்தனையும் சொன்ன என்னை இளிச்ச வாயன் என்னாங்க.**
**நான் ஒரு முட்டாளுங்க**

- அப்ப வரட்டே






# இவர்களும் சர்வாதிகாரிகளே

உலக நாடுகளில் அனைத்து நாடுகளிலும் தலைவன் அல்லது மன்னன் சொல் கேட்கும் குடிமக்களே வாழ்ந்துள்ளார்கள் என்பதேயாகும். இந்த மக்கள் தமது அன்றாட வாழ்வுக்கு தேடிக் கொள்ளும் தேட்டங்களை மன்னர்களுக்கு கொடுக்க வேண்டிய கட்டாயப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். உண்பதும் வாழ்வதும் என்ற எல்லையின் சுருக்கத்திற்குள் இந்த மனிதர்கள் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரை அடக்கியாளப்படும் அரசுகள் தமது வடிவத்தை மாற்றிக் கொண்டார்களே தவிர மக்களை ஒரு அடிமையாகவே நடத்தினார்கள்.

– ஏலையா க.முருகதாசன்

உலக நாடுகள் இன்றுவரை பல்வேறுபட்ட கோட் பாடுகளையும் சித்தாந்தகங்களையும் தமது ஆட்சிக்கான வரைபுகளாக கொண்டு நாடுகளை நிர்வாகித்து வந்திருக்கின்றன. இந்தக் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் அந்தந்தக் காலங்களில் தோன்றிய கோட்பாட்டாளர்களாலும் சிந்தாந்தவாதிகளாலும் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும், மக்களின் வாழ்வின் வாழ்வியலும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கும் அவர்கள் முகம் கொடுத்த போது அந்தந்த நாடுகளில் ஆட்சியாளர்களின் ஆட்சி நிர்வாகத்திற்கு எதிராக புதிய சிந்தனை கொண்டவர்களின் சிந்தனையை நோக்கி மக்கள் அணிதிரளத் தொடங்கினார்கள்.

மானிட வாழ்வின் சுதந்திரத்தை மன்னர்களின் ஆட்சியே நமக்களிப்பதாக நம்பியிருந்த மக்கள் தாங்கள் அடிமைகளாகவே இருக்கிறோம் என்பதை அறியாதவர்களாக இருந்தார்கள். எங்கிருந்து எப்பொழுது மனிதன் தோன்றினான் என்பதைத் திட்டவட்டமாக கூறமுடியாதுவிட்டாலும் ஒரு அறிதலுக்காக, ஆவணப்படுத்தப்பட்ட மனித வரலாற்று ஆவணங்களிலிருந்து காணக்கூடியதாக கிடைத்ததன் தொடர்ச்சியான மக்கள் பெருக்கத்தின் வாயிலாக

அரசுக்கெதிராக சிந்திப்போரை படைபலம் கொண்டு அடக்குவது அவர்களை சித்திரவதை செய்வது மரணத்தைக் கொடுப்பது என்ற அச்சுறத்தலுக்கு உள்ளாகிய மக்கள் உயிரின் பயத்தால் அடிமை வாழ்வே தமக்கு உகந்தது என அந்த வாழ்விற்கு இசைவாக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆனால் மானிடத்திற்கு எதிரான ஆட்சியின் தாக்கங்கள் மரண அச்சுறுத்தலையும் தாண்டி மக்கள் மத்தியில் புதிய சிந்தனைகளை உருவாக்கக்கூடிய நிலையைத் தோற்றுவித்தது. புதிய சிந்தனைகள் எண்ணங்களாகவும் எண்ணங்கள் மக்களுக்கான கோட்பாடுகளாக வடிவம் பெறத் தொடங்கிய போது நாடுகளின் ஆட்சித் தன்மையை பொறுத்து சித்தாந்த வாரியாக கோட்பாடுகள் உருவாகின.

எங்கேயோ ஒரு நாட்டிலிருந்து பெறப்படுகின்ற கோட்பாடுகள் பல தூரம் பல நாடுகளுக்கு பயணித்து அங்கெல்லாம் அதனை முன்னெடுக்கும் தலைமைகளை உருவாக்கியது. சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக மானிட கோட்பாட்டு அறிவியலாளர்கள் சனநாயகம், பொதுவுடமை, சமூக சமதர்மம் போன்ற கோட்பாட்டை உருவாக்கினார்கள். இக்கோட்பாடுகளை உள்வாங்கிய மக்களிலிருந்து இக்கோட்பாட்டை நடைமறைப்படுத்தக்கூடிய தலைவன் உருவாகினான். உழைப்பாளிகளின் நலனில் அக்கறை இல்லாது அவர்களை மனிதர்களாகவே

கணக்கெடுக்காது அவர்களின் உழைப்பைச் சுரண்டிய அரசுக் கொள்கைகளுக்கெதிராக கால்மார்க்ஸ் கோட்பாட்டிசம் (கார்ல்மார்க்ஸ் 1818-1883) சமதர்ம அறிவியலை உலகிற்கு அறிமுகப்படுத்திய போது சமதர்மமே அக்காலகட்டத்தில் சிறந்த அரசாட்சிக் கோட்பாடு என சர்வாதிகாரத்துக்குள் உழன்று கொண்டிருந்த மக்களால் உணரப்பட்டது.

கோட்பாட்டு ரீதியாக மனிதர்களை ஒன்றிணைப்பது சுலபமான காரியமல்ல. மக்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சுமைகள் அந்த வாழ்வியலுக்கு தேவையாக இருக்கின்ற பொருளாதார நிலை அதற்கமைவான மகிழ்ச்சி போன்றவை கோட்பாட்டாளர்களால் உறுதி செய்யப்படும் போதுதான் மக்கள் கோட்பாடு தமக்குரியதுதான் என உணர்வார்கள்.

அதே வேளை கோட்பாட்டின் அலகுகளை எல்லா நாடுகளிலும் ஒரே விதமாக முன்னிறுத்த முடியாது. மக்களின் தேசப்பற்றுக்கு அக்கோட்பாடுகள் அவர்களின் வாழ்வியலோடு இணைந்து செல்வதற்கான சூழ்நிலையை கொண்டிருந்தால் மட்டுமே அக்கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தும் தலைவன் சொல்வதை மக்கள் அனுசரித்துப் போவார்கள்.

சீனாவில் மக்களை ஒருங்கிணைக்க, அங்கு ஆங்காங்கே இருந்து குறுநிலமன்னர்கள் என்ற தன்மை கொண்ட ஆட்சியாளர்களுக்கெதிரான மக்கள் எழுச்சியை தோற்றுவித்ததில் மாசேதுங்கே முதன்மை பெறுகிறார். ஒரு நாட்டினுடைய உண்மைத்தன்மையை அந்த நாட்டிற்கே உரிய அடையாளத்தை உருக்குலைந்து போகச் செய்கின்ற அந்நிய பண்பாட்டு மேவல் தனது நாட்டுக்குள் வந்துவிடக்கூடாது என்பது மட்டுமல்ல உலகிலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட தனது நாட்டை பொருளாதார வறுமையிலிருந்து மீட்டெடுக்க சமதர்ம கொள்கையே உகந்தது என மாசேதுங் நம்பியது மட்டுமல்ல அதனை இலகுபடுத்தி அதனை மக்கள் தமக்குரியது என நம்ப வைத்தார்.

மாசேதுங்கின் இக்கோட்பாட்டினை சீனாவின் அனைத்து மக்களும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்வதிற்கில்லை.
அதற்கெதிரான மக்களின் செயல்பாடுகளை சட்டங்கள் மூலமும் அடக்கினார் என்பதையோ தண்டனைகள் கொடுக்கப்பட்டது என்பதையோ நிராகரிப்பதற்கில்லை.

சர்வாதிகாரப் போக்கிலிருந்து சமதர்ம கோட்பாட்டு ரீதியாக தன்னை வடிவமைத்துக் கொண்ட நாடு ரஸ்யா. சர்வாதிகாரி யோசப் ஸ்டாலினின் (1818-1953) மறைவுக்குப் பிறகு சமதர்ம அறிவியல் கோட்பாட்டிஸத்தை அறிமுகப்படுத்திய ரஸ்யா தமது நாட்டுக்கு ஏற்றவிதமாக சமூகசமதர்ம கோட்பாட்டினை உருவாக்கியது.

லெனின், குருசேவ், கோர்பச்சோவ், பொரிஸ் யெல்ற்சின், டிமிற்றி மெட்வெட்வே, புட்டின் வரை இவர்கள் சமூகசமதர்ம கொள்கையை நிலை நாட்டியவர்கள் என்றாலும் இக்கொள்கைகள் கொள்கை ரீதியாகவும் அதனை நடைமுறைப்படுத்தலுக்கான ஆட்சியாளர்களினால் தோற்றுவிக்கப்படும் சூழ்நிலைகளினாலும் அதுவும் ஒரு சர்வாதிகார வடிவத்தைக் கொண்ட ஆட்சிக்கட்டமைப்பு எனவும் கொள்ளலாம்.
தொடர்ச்சியாக ஒரு தலைவன் மக்கள் விரும்புகிறார்கள் என்ற ரீதியில் சனநாயக வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் நுண்ணிய உற்றுநோக்கல் அவதானிப்பு போன்றவற்றின் ஊடாக தொடர்ச்சியாக ஒருவர் ஒரு நாட்டின் தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொள்ள மக்களை அதனை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான அரசியல் பிரச்சாரங்கள், ஊடகப் பிரச்சாரங்கள் மூலம் மக்களை அதனை நோக்கி நகர்த்தியமை வேறு சிந்தனையை தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளாத மக்களின் மனநிலைகளை அசையவிடாமல் பார்த்துக் கொள்வதில் அது ஒரு சர்வாதிகாரமாகக்கூட அவதானிகளால் கணிக்கப்படுகின்றது.

இத்தெரிவானது சனநாயகசர்வாதிகார நவீன கோட்பாடாக மக்கள் மத்தியில் சனநாயகம் என்ற இலகுத்தன்மையடன் திணிக்கப்படுவது தெரியாமலே திணிக்கப்படுவதால்தான் சனநாயக வாக்கெடுப்பென்ற சனநாயக வழிமுறையில் சனநாயக கோட்பாட்டுக்குள் தோற்றப்படாத உள்ளீடாக சர்வாதிகாரம் திணிக்கப்பட்டுள்ளது.
வெற்றுக்கண்களால் பார்க்க முடியாத மிக மிக நுண்ணிய பொருளை அல்லது அணுவை நுண்பெருக்கிக் கண்ணாடி ஊடாகவோ அல்லது அதனைப் பகார்க்கக்கூடிய கருவி ஊடாகவோ கண்டறிவது போல மிக மிக நுண்ணறிவியலுடன் பார்த்தால் மட்டுமே சனநாயகத்துக்குள் சர்வாதிகாரம் உண்டென்பதை கண்டறிய முடியும்.

எனவே ரஸ்ய அதிபர் தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்த அக்கொள்கைகளை நிர்வாகக் கட்டமைப்புகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாத போதும் தயக்கம் கொள்ளும் போதும் மக்கள் தொடர்ச்சியாக சனநாயக வாக்களிப்பு மூலம் அவரைத் தெரிவு செய்த வழிமுறையால் மக்களின் ஆணை என்பதற்கூடாக மக்களும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என அவர்களையும் தனது செயல்பாட்டுக்கு பங்குதாரர்களாக்கி புடின் ஒரு சர்வாதிகாரியாக உருமாறும் சாத்தியம் ஏற்படலாம்.



சீனாவில் மக்களின் ஆணை எனவும் அங்குளள் அரசியல் அறிவியலாளர்களின் ஒருங்கிணைந்த விருப்பம் என்ற முனைப்புக்கூடாக இன்னொரு சர்வாதிகாரியாக சனநாயக ரீதியாக சீனாவில் சீனப் பிரதமர் உருவாகி வருகின்றார்.

படைபலம் கொண்டு நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தியது போல பொருளாதாரப் படையெடுப்பு இன்று நாடுகளை ஆக்கிரமித்துள்ளது. ஒரு நாட்டு இராணுவ ஆளணி, அது கொண்டிருக்கும் நவீன இராணுவத்தளபாடங்களான கட்டமைப்பு ஆகியவற்றிற்கூடாக இன்னொரு நாட்டின் ஆளணி இராணுவத்தளபாடங்கள் மீதான பலவீனம் சார்ந்து அதுனூடாக தனது நலன் கருதி இன்னொரு நாட்டிலிருந்து நலன் பெறுவதற்காக அந்த நாட்டின் நெகிழ்ச்சிப் போக்குக்கூடாக தனது தேவையைப் பூர்த்தி செய்வது.இதில் நேரடியாக மக்களுக்கு தொடர்பு இருக்காது.
ஆனால் சீனா ஆரம்பித்திருக்கும் பொருட்களை உற்பத்தி செய்து உலகையே சந்தைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருப்பது என்பது ஒரு பொருளாதாரப் போராகும்.இதனை பொருளாதாரச் சர்வாதிகாரம் என்றும் சொல்லலாம்.

இது ஒரு பொருளாதாரப் போர் என்று தோன்றாமலும் இதிலும் ஒரு சர்வாதிகாரம் என்று தோன்றாமலும் மலிவான விலையில் வாங்கக்கூடிய பொருட்களாக உலக மக்களின் வீட்டுக்குள் தன்னிச்சையாக நுழைந்துவிட்டதுதான் சீனாவின் பொருளாதார சர்வாதிகாரம்.

உலகைத் தமது கைகக்குள் கொண்டு வருவதற்கான வழிமுறைகளில் மக்களோடு அவர்களின் நாளாந்த வாழ்க்கையோடு நெருங்கி நிற்கின்றன சீனாவின் உற்பத்திப் பொருட்கள்.

மக்களின் வருமானம் சார்ந்து மலிவு விலையில் வாங்கப்படும் சீனப் பொருட்களால் சீனாவின் பொருளாதார மென்மைப் போரில் மக்கள் நிர்பந்தம் என்று அறியாத நிலையில் நிர்பந்திக்கப்பட்டு அதற்குரியவர்களாக மாறி வருகிறார்கள்.

இதற்கமையவே சீனப் பிரதமரான லீ கேக்கியாங்கை தொடர்ச்சியாக சீனாவின் பிரதமராக இருக்கலாம் என சர்வாதிகார போக்கினை சனநாயக முறையென கொண்டு மக்களும் அரசியல் அறிஞர் குழுவினரும் ஆணையிட்டுள்ளனர்.

பொருளாதார ரீதியாக வணிகமயப்படுத்தப்பட்ட உலகை ஆள சீனாவில் பிரதமர் என்ற பெயரில் ஒரு பொருளாதாரச் சர்வாதிகாரி உருவாகி வருகிறார் என்பதை காலம் உணர்த்தும்.

மக்களை நோக்கியும் அவர்களின் தேவை நோக்கியும் மக்கள் கொண்டுள்ள நிதிப்பற்றாக்குறை நோக்கியும் கையாளப்பட்ட வழிமுறையே வணிகத்தால் உலகை ஆளலாம் என்பதாகும்.
சீனாவிலும் ரஸ்யாவிலும் சர்வாதிகாரிகள் என்ற தோற்றத்தை வெளிக்காட்டிக் கொள்ளாத சர்வாதிகாரிகள் தோன்றியுள்ளார்கள்.

# உளம் திறக்கும் உண்மைகள்...

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.

AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu

## சாக்கடை!...

சாதனைகளை இன்னும்
சாதிப்பதில் அவனுக்கு
தடையாய் இருப்பது
சாதி என்னும் சாக்கடை!...
– வ.சிவராசா



## குரங்குப் படை !

இராம ராஜ்ஜியம் அமைக்க
தமிழ் நாட்டுக்குள் வந்தது !
இருபத்தி ஓராம் ஆண்டில் இது
இந்தியாவின் யுகப் புரட்சி !
– யுகபாலன்



## தொடரும் முள்ளிவாய்க்கால் !

சிங்களவன் இராமனின் பரம்பரை
அதனால் இந்தியா சிங்களத்தை
ஆதரிக்கிறது என்கிறார் வாஜ்பாய்!
அதனால் எதிர்த்த செந்தமிழன்
சீமானை சிறை வைத்தது அரசு !
–ஆதன்

## சிசு!...

கருவோடு சேருகின்ற
விந்து என்னும்
விந்தைதானே
கருவைச் சிசுவாக்குகின்றது.
– வ.சிவராசா

## செய்தி!...

பூக்களையும் பிஞ்சுகளையும்
காம வண்டுகள்
கசக்கி எறியும்
செய்திகள் அதிகம்!...
– வ.சிவராசா

# அகரக் கவிக்களம்...

தொகுப்பு: தமிழ்விழி

## நியதி!...

மண்ணில் புதைந்திருக்கும்
விதைமீது விழுகின்ற
மழைதானே – விதையை
முளை ஆக்குகின்றது!...

– வ.சிவராசா






## இராமன் ஆட்சி !

வந்து விட்டது இராம ரதம்
தந்து விட்டது இராமர் ஆட்சி !
இரும்புக் கரங்களில் கசங்கித்
தவிக்கிறது சீதைகள் இனம்
அடுத்து அக்கினிப் பிரவேசமா?

–பாக்கியம்

## ஆன்மீக அரசியல் !

ஆண்டுக்கு ஒரு முறை
இமய மலையிடம் ஆசி
பெற்று ஆட்சி நடத்துவார்
அருட் திரு ரஜினி சுவாமிகள்!
உண்டியல் நிரப்ப பக்தர்களே
தயார் ஆகுங்கள் !

–கருமி


விளம்பரத்
தொடர்புகளுக்கு:
0049 17647118711


www.akaram.eu

# Jaffna Stores

Feilenstr. 8, 33602 Bielefeld | Tel.: 0521 174794 | Mob.: 0173 2807906




## புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!

ஆசியா, ஆபிரிக்கா, சீனா,
நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன், உடன்
மரக்கறிவகைகள், மீன் வகைகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
**Bielefeld** நகரில்
ஒரு மாபெரும் நிறுவனம்.

*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
**NSR** *தயாரிப்புகளை விற்பனைசெய்ய விரும்புவோர்*
**Jaffna Stores** *உடன் தொடர்புகொள்ளுங்கள்.*

***African** உணவுப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*




**Öffnungszeiten:**
Montag bis Samstag
von 08:30 bis 20:00

**Geschäftsführer: Thayaharan Nadarajah**

www.jaffnastores.com
info@jaffnastores.com









போர்க் காலச் சூழல். பசி பஞ்சம் பட்டினி மக்களின் அன்றாடப் போராட்டமாக இருக்கும் பொழுது யேர்மனியின் தலைவனான அடொல்ப் ஹிட்லர் தனது இலட்சியப் போரை நடத்தத் தலைப்பட்டு விட்ட நேரம். முதலாவது உலகப் போரில் தோற்கடிக்கப் பட்ட யேர்மனி மீது மேற்கத்தைய நட்பு நாடுகளின் அணி விதித்த அமைதி உடன் படிக்கை விதிகளால் பாரிய பொருண்மிய இழப்புகளையும் சுய கௌரவத்தையும் சந்தித்த அவமானத்தை அந்தப் போரில் பங்கு பற்றிய ஹிட்லரால் தாங்க முடியவில்லை.

எனவே அவனே யேர்மனியின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றதும் பழி வாங்கும் வெறியோடு யேர்மானிய தேசிய எழுச்சிக்கு குரல் எழுப்பி மக்களின் பேராதரவோடு அந்நாட்டின் ஜனாதிபதி (தலைவன்) ஆகத் தெரிவு செய்யப்பட்டான். பதவி ஏற்ற நாள் முதலாக அவன் தனது தேசத்தின் மீது அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் விதித்த அநீதியான அமைதி உடன்படிக்கை நிபந்தனைகளை மீற மீண்டும் போர் வெற்றிதான் ஏற்ற வழி என நினைத்துப் படைகளைத் திரட்டி முதலில் அயல்நாடான அஸ்திரியாவை போர் தொடுத்து வெற்றி பெற்றான்.

தன் இலட்சியத்தை அடைய தேவையான ஒப்பந்தங்களையும் உடன் படிக்கைகளையும் ரஷியாவுடன் செய்து கொண்ட பின்னர் ஜப்பானையும் இத்தாலியையும் இணைத்துக் கொண்டான். அவனுடைய போர் ஐரோப்பிய நாடுகளை வென்று உலகப் போராக மாறிக் கொண்டு வந்தது.

ஜப்பானியப் படைகள் மலேசியா சிங்கப்பூர் பர்மா என விரிந்து இலங்கை வரை பரவியது. மலேசியா சிங்கப்பூரில் பணி புரிந்த ஏராளமான யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இப்போரில் மாண்டனர். அக்காலத்தில் இத்தகைய மரணச் செய்தி கடல்வழித் தந்தியாக மட்டும் வந்தடைய முடியும் அதுவும் போர்க் காலம் என்பதால் சேவைகள் பல வாரங்கள் அல்லது மாதங்கள் கடந்த பின்னரே எமது உறவுகளின் மரணச் செய்திகள் ஊரை வந்தடையும்.

அப்படிக் கிடைக்கப் பெறும் செய்திகளால் அவனது கிராமத்தில் அழுகுரலும் ஒப்பாரியும் கலை மாலை வேளைகளில் ஒலிக்கும். பழுஞ் சலிப்பு என ஈமக் கடன்கள் உறவினரால் செய்து தீர்க்கப்படும் வரை இத்தகைய அழுகுரல் நீடிக்கும். போர் முடிந்து அகதிகளாக அல்லது பணி விடுப்புப் பெற்ற பின்னர் ஊர் திரும்பிய மக்களால் மரணித்தவர் பற்றிய தகவல்கள் கிடைக்கும் வரை யார் இறந்தார் யார் இருக்கிறார் என்ற விபரங்கள் தெரிந்தன.

அப்படிப் பலர் திரும்ப வந்ததால் சிங்கப்பூர் மலேசியாவில் பிறந்த பல பிள்ளைகள் 1946ல் அவன் படித்த பள்ளியில் சேர்ந்து கொண்டனர். அவர்களின் வரவால் அவனது கிராமிய வாழ்வியல் பல மாற்றங்களை கண்டது.




குறிப்பாக மாணவ மாணவியரின் ஆடை அலங்கார பழக்க வழக்கங்கள் எனலாம். அதுவரை ஒரு சில பெண்களே பருவமடைந்த பின்னர் பள்ளிக் கூடம் வந்த நிலை இருந்தது. அதுவும் நிலத்தை தொடும் பாவாடை தாவணி பெண்களின் உடையாகவும் வேட்டி மட்டும் மாணவர்கள் அணியும் நிலை மாறி பெண்கள் முழங்கால் தெரிய சட்டையும் ஆண்கள் கால் சட்டை சேட்டும் அணியும் நிலை ஏற்பட்டது.

இதே போன்ற கலாச்சார மாற்றம் 1958ல் இலங்கை தலைநகர் கொழும்பில் கலவரம் காரணமாக இடம் பெயர்ந்த மாணவ மாணவிகளால் மிகப் பெரும் கலாச்சாரப் புரட்சியை வட பகுதி கண்டது.

குறிப்பாக மாணவிகளின் நடை உடை பாவனை மாணவர்கள் மாணவிகளிடையே உள்ள உரையாடல் ஊடாடல் எல்லாம் பெரும் மாற்றம் கண்டன. பணவசதி இருக்கோ இல்லையோ அனைவரும் அந்த அலையில் சிக்கித் தவித்தனர். தலை குனிந்து தரை பார்த்து நடந்த தமிழ் பெண்கள் தலை நிமிர்ந்து தலை தெறிக்க சைக்கிள்களில் தெருவை ஆக்கிரமித்து செல்வதும் ஆண்கள் படை பின்னால் அணிவகுத்துச் செல்வதும் அன்றாடக் காட்சிகளாக நாடு மாறியது. இந்தப் புயலில் பல சாதிகளைக் கடந்த காதல் மணங்களும் சமூகப் புரட்சியும் ஆங்காங்கே அரங்கேறின. இவை அனைத்துக்கும் பின்னால் 2ம் உலகப் போர் பிரசவித்த முதலாளித்துவம் தனது சுரண்டல் கலாச்சாரத்தை அமைதியாக வளர்த்துக் கொண்டது. முதன் முதலாக அது இலவசமாக தேநீரை மக்களிடம் குடிக்கக் கொடுத்து தேநீர் குடிக்கும் புதிய வழக்கத்தை மக்களிடம் ஏற்படுத்தியது. தினமும் பிற்பகல் 4-5 மணியளவில் ஊர் தெருக்களில் பாலும் சீனியும் சேர்த்த தேநீரை மக்கள் பருக இலவசமாகப் கொடுத்தது.

பின்னர் இலவசமாக நெஸ்டோ மால்ட் ஒவல்ரின் போன்ற பானங்களைத் தயார் செய்து பாடசாலைகளில் மோட்டார் வாகனங்கள் மாணவருக்கு இலவசமாக குடிக்க வைத்தன. இவை அனைத்துக்கும் பின்னால் மிகப் பெரும் வர்த்தகச் சுரண்டல் உருவாக்கப் படுவதை யாரும் அறியவில்லை அல்லது திட்டமிட்டு மூடி மறைக்கப் பட்டன.

காலையில் தேநீர் கோப்பி அருந்தும் பழக்கம் இன்று தவிர்க்க முடியாத கட்டாயமாக மாறி விட்டது. இவற்றால் ஏற்படும் மேலதிக செலவினம் என்பதற்கும் அப்பால் அரசு வரி மற்றும் விளம்பர செலவினங்கள் மலைபோல் மறைந்து கிடப்பதை எவரும் அறிவர். ஆயினும் பழக்கத்துக்கு அடிமைப் பட்ட அப்பாவி மக்களால் எல்லாவற்றையும் தாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

காலையில் பச்சைத் தண்ணீரும் பழஞ் சோறும் கொடுத்து வந்த உடற் சுகத்தை இவ்வளவு செலவு செய்து குடிக்கும் கோப்பி தேநீர் பானங்களால் முடியுமா? மாறாக தீராத வியாதிகளுக்கு விதை போடும் விசப் பானங்களை அல்லவா பருக வைத்து விட்டனர்.

உடலுக்கும் உறவுக்கும் உரமாக இருந்த வெற்றிலை பாக்கு போடும் கலாச்சாரம் விசமப் பிரச்சாரங்களால் அழிந்து போய்விட்டன. கல்யாணமோ கருமாதியோ தாம்பூலம் தரிக்கும் கலாச்சாரத்தை சிகரெட்டும் ஐஸ் கிறீமும் பறித்து விட்ட கொடுமையை எவரிடம் சொல்வது. வாய் நாற்றம் வயிற்று கோளாறுகள் இல்லாத கணவன் மனைவி தாம்பத்திய உறவுச் சிறப்பை உறுதி செய்யும் பழக்கம் இன்று வெறும் கலாச்சாரக் காட்சிப் பொருளாகி போய்விட்ட நிலை. உலக முதலாளித்துவம் முதலில் சிறு குழந்தைகள் தொடர்பான சந்தைப் பொருட்களில் கவனம் செலுத்தியது. பிறந்த குழந்தைகளை எப்படிப் போசாக்கு நிறைந்த பிள்ளைகளாக உருவாக்குவது என்ற புதுப் புரளியை மக்களின் மனதில் பிரச்சாரப் படுத்தியது.




இயற்கையாக செலவின்றிக் கிடைத்து வந்த தாய்ப்பாலை தரமற்ற உணவாகப் பிரச்சாரப் படுத்தி தனது பசுப்பாலை குழந்தைப் பால்மாவாக விளம்பரம் மூலம் டாக்டர்களின் பரிந்தரைகள் மூலம் மக்களின் மனதை மூளைச் சலவை செய்து தனது பால்மாவை குழந்தைகளின் ஒரே உணவாக விற்பனைப் படுத்தியது.

இதற்கென கொழு கொழு தோற்ற கொண்ட வெள்ளைக் காரப் பிள்ளைகளின் படங்களைப் போட்டு அரச குடும்பங்களின் குழந்தைகளின் உணவு என பித்தலாட்டம் செய்து கொள்ளை இலாபம் அடித்தது.

மறு புறத்தே பெண்கள் குழந்தைகளுக்குத் தாய் பால் ஊட்டுவதால் மார்பழகு குன்றி பெண்களின் கவர்ச்சியையும் அழகையும் பாழடிக்கிறது எனப் பிரச்சாரப் படுத்தி பெண்களுக்கான அழகு சாதனங்களையும் கவர்ச்சி உள்ளாடை வெளி ஆடைத் தயாரிப்புகளால் மிகப் பெரும் சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்கியது.

குழந்தைகளையும் பெண்களையும் மிக எளிதாக வளைத்துப் போட்டு அதன் மூலம் ஒவ்வொரு மனிதனின் உழைப்பின் பெரும் பகுதியை தினமும் பறித்தெடுக்கும் வாழ்க்கை முறையை 2வது உலகப் போருக்கும் பின்னான முதலாளித்துவம் உருவாக்கி விட்டது.

ஆனால் இவை எல்லாம் பல்வேறு நோய்கள் கோளாறுகளை உருவாக்கவும் அவற்றுக்கான மருத்துவச் செலவுகளை எதிர் நோக்கவும் அவற்றால் பெரும் செலவுகளை தினந்தோறும் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு நாம் ஆளாக்கப் படுகிறோம். இவை போல இன்னும் ஏராளம் உண்டு.



Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)

Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

## மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்!!!

**அன்பான வாடிக்கையாளர்களே!**

கடந்த வருடங்களில், எம்முடன் இணைந்து, எம்மைத் தரமான, நம்பிக்கையான உங்கள் நிறுவனமாக, ஏற்றுக் கொண்ட, எம் தேசத்து உறவுகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரி-விப்பதோடு, பிறக்கின்ற 2018ல் இன்னும் சிறந்த நிறுவனமாகவும், உங்களுக்கு மேன்மேலும் சலுகைகளை, வழங்கும் முகமாக, வாடிக்கையாளர் அட்டையை வழங்கக், காத்திருக்கின்றோம்.

முக்கியமாக அனைவரும் உங்கள் அட்டையைப் பதிவு செய்யுங்கள் மிக நன்மை அளிக்கும் சலுகைகள், சிறந்த நேர் காட்டலில் நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன், எமது முக நூல் மூலம் இணைந்து, கொள்ளுங்கள்.
முகவரி அற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

“விலை அல்ல’ எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது”
“தரம் மட்டுமே நல் வாழ்வைத் தரும்“




வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Facebook: AKM Mani | Facebook Page: AKM

Alpenstr.1,
3072 Ostermundigen
Tel. 031 9312525
(Bern Nilavani)

Basel Str. 80,
6003 Luzern
Tel. 041 2405400

## தமிழர்களுக்கு தேவையான அனைத்து விதமான உணவுப் பொருட்களின் மொத்த, சில்லறை விற்பனை நிலையம்

A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால் ஈழத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!

# புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வு மையங்களில் கொடுக்கப்பட்ட விஷ ஊசி இந்தியத் தயாரிப்பா?



– பரம்

ஈழப் போரின் போது பாவிக்கப்பட்ட கொத்துக் குண்டுகள் பாகிஸ்தான் தயாரிப்பு எனச் செய்திகள் வெளியாயின. போரில் இந்தியா கொடுத்தது எதிரிகளின் நிலைகளைக் காட்டிக் கொடுக்கும் ராடார் கருவிகள் மட்டும்தான் அவை மக்களைக் கொல்லாது எனப் பிரச்சாரப் படுத்தப் பட்டது. இன்றும் கூட அது மட்டுமே இந்தியாவின் பங்களிப்பு என வாதாடும் பிரகிருதிகள் பலரைக் காண்கிறோம்.

பின்னர் தமிழகம் ஆவடியில் தாயரிக்கப் பட்ட பீரங்கி வண்டிகள் கடல் வழியாக வந்த செய்திகளைப் படித்தோம். அமைதிப் படை என வந்த இந்தியப் படை செய்த மனிதப் படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்களின் பட்டியலின் நீளம் எவருக்கும் தெரியாது.

ஈழப் போரைத் திட்டமிட்டு வழி நடத்தியதும் இந்தியா என்பது இன்று பழைய செய்தி. போரின் பலன்களைப் பெரிதும் அனுபவிப்பதில் இந்தியா சளைத்து விடவில்லை என்பதை இன்றைய கள நிலை மற்றும் இராணுவ வர்த்தக அனுகூலங்கள் புலப்படுத்தும். ஆனால் இவை பற்றிப் பேச எவருக்கும் துணிச்சல் இல்லை என்பதுதான் உண்மை.

இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகளுக்கு சட்ட விரோத கைதுகள் தடுப்பு முகாம்கள் புனர்வாழ்வு மையங்கள் கைதிகளைக் கொல்லும் ஊசி மருந்துகளை இந்தியா தயாரிக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? என்ற பெயரில் ஒற்றர்களை உருவாக்குதல் முடியாத பொழுது விஷ ஊசி ஏற்றி மன ஊனம் ஏற்படுத்துவது என்பன அறியாத செய்யாத விடயங்கள் அல்ல.

ஆட்களைக் கொல்லும் ஊசி மருந்துகளை இந்தியா தயாரிக்கிறது என்பதும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கிறது என்பதும் அதனை விற்பனைப் பொருளாக பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

**ஆதாரம் !**

2017ல் அமெரிக்க மாநிலமான ரெக்ஸாஸ் அரசு எஃப்.டி.ஏ எனப்படும் மாநில மருந்துகள் அதிகார சபை மீது ஒரு வழக்கைப் பதிவு செய்தது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட 1000 சோடியம் தியோ பென்ரால் அடங்கிய குப்பிகளை உள்ளே அனுமதிப்பதா இல்லையா என முடிவு செய்ய ஹூஸ்ரன் விமான நிலையத்தில் அநியாயமாக 17 மாதமாகத் தடுத்து வைத்துத் தாமதப் படுத்துகிறது என்பது முறைப்பாடு.

**'சோடியம் தியோ பென்ரால்'**

இவ்வகையான மருந்துகள் கண்டனத்துக்குரிய

மரண தண்டனைகளை அமெரிக்க மாநில அரசுகள் பயன்படுத்தி வருகின்றன. வழக்குத் தாக்கலாகி ஏறக் குறைய 2 வருடங்கள் கழித்து நீதி மன்றம் இவ்வகை மருந்துகளை அமெரிக்காவுக்குள் அனுமதிக்க முடியாது எனத் தீர்ப்பு வழங்கி உள்ளது. மருந்து தயாரிப்பாளர் யார் போன்ற விபரங்களை வெளியிட வேண்டும் என நீதிபதி கூறிய போதிலும் அவற்றை வெளியிட முடியாது என சிறைத் துறை மறுத்துவிட்டது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் இவ்வகை மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப் படுகின்றன என்பதே. எம் இனத்தின் மீது போரை நடத்திய இந்தியாவில் இத்தகைய மருந்துகள் தயாரித்து ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால் எமது முன்னாள் போராளிகள் மீது புனர்வாழ்வு முகாம்களில் எத்தனை எளிதாக இவை பயன்படுத்தம் வாய்ப்புகள் உள்ளன என்பதை அறியலாம்.

முன்னாள் புலிகளின் அரசியல்துறை மகளிரணிப் பொறுப்பாளர் தமிழினியின் மரணம் அவரைத் தொடர்ந்து புற்று நோயால் மடிந்த பல புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப் பட்டவர்களின் வரிசையில் அண்மையில் முன்னாள் போராளி சந்திரச் செல்வனின் மரணம் நிகழ்ந்துள்ளது.

இதுவரை 1748 பேரின் மரணங்கள் அறியப்பட்டுள்ளன. கணக்கில் வராதவை இன்னும் எத்தனையோ இருக்கலாம். ஏனென்றால் இது விடயமாக நம்பகமான ஒருங்கிணைக்கப் பட்ட தகவல் தரவு மையம் என எதுவும் கிடையாது.

2015ல் தமிழினியின் மரணம் மக்கள் மனதில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியதால் புனர் வாழ்வு பெற்ற பல போராளிகளின் மரணங்களும் சிலரது வாக்கு மூலங்களும் இது பற்றிய மருத்துவ ஆய்வுகளை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. உடனே பலரும் பலவித சந்தேகங்களையும் எதிர்ப் பிரச்சாரங்களையம் செய்து அந்தக் கோரிக்கையை மழுங்கடித்தனர். இதில் சம்பந்தப் பட்ட அரசுகளும் அவற்றின் பிரச்சார தந்திரங்களும் வெற்றி பெறவே ஆக்க பூர்வமான எந்த ஒரு தீர்வும் எட்டப்படாமலே இக்குற்றச்சாட்டு கிடப்பில் போனது.
சர்வ தேச கவனம் பெற்றுவிட்டதால் மைத்திரியின் நல்லாட்சி அரசு நல்லிணக்கப் பொறிமுறை என செயலணி ஒன்றை ஏற்படுத்தி மக்களிடையே கருத்தரங்குகளை நடத்தி மக்களின் ஆலோசனைப் பெறுவதாக நாடகம் ஆடியது.
அப்படியான ஒரு செயலமர்வில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவர் தமக்கு ஊசிகளும் உணவில் மருந்துகளும் கொடுத்து தமது உடல் வலுவை இழக்கச் செய்து விட்டனர் என்றும் வேறு பலரும் இதே நிலையில்தான் வாழ்கின்றனர் என்றும் பகிரங்கமாக தெரிவித்தார்.

இந்த விடயம் முன்னரும் பல முறை எழுப்பப் பட்ட ஒன்றுதான். ஆனால் கேட்பார் அற்ற அநாதை இனமாக்கப் பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் என்றைக்கும் எளிதில் எட்டிவிடாது. அப்படி ஒரு தீர்வு எட்டிவிடுவதை எப்படி ஒரு இன அழிப்பைச் செய்த வல்லாதிக்க அரசுகள் அனுமதிப்பர் என்ற மிக அடிப் படையான கேள்வியைக் கூட எழுப்பி எம் வீர மறவர்களை காப்பாற்ற எவருமே இல்லாமல் இருப்பதுதான் எம் இனத்தின் இன்றைய மிகப் பெரும் அவலம்.

கொத்துக் குண்டுகளும் இரசாயன நச்சு எரி குண்டுகளையும் போரின் பொழுது பயன் படுத்தியதற்கு நம்பகமான ஆதாரங்கள் பல வெளியான நிலையிலும் சிங்கள அரசு அவற்றை அடியோடு மறுத்தும் உண்மையைக் கண்டு அறிய முனைந்த சர்வதேச ஆய்வாளர்களை தடுத்ததோடு ஐ.நா.வில் வாக்குறுதி கொடுத்த கூட்டு நீதி விசாரணைப் பொறிமுறையைக் கூட ஏற்படுத்த மறுக்கும் அரசு கைது செய்யப் பட்ட அல்லது சரணடைந்த புலிப் போராளிகளையும் சந்தேக நபர்களையும் சும்மா விட்டு வைக்கும் எனக் கூறுவதும் அப்படிப் பிரச்சாரப் படுத்துவதும் அனுமானிப்பது மிகக் கடினமான விடையம் அல்ல.

ஆனால் தமிழினத்தின் அரசியல் தலைவர்கள் அப்படித்தான் அப்பாவி மக்களை நம்ப வைப்பதோடு சுயாதீனமான சர்வதேச போர்க் குற்ற விசாரணை தேவை அற்றது அல்லது அப்படிச் செய்தால் புலிகளும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டி வரும் அது ஆபத்தாக முடியும் என அச்சுறுத்துவது ஏன்? அவர்களின் வாதங்களில் அணுவளவாவது உண்மை இருக்க முடியுமா?

முதலில் இந்தப் போரை இந்திய அரசு உட்பட உலகின் பலம்மிக்க பல அரசுகளின் ஆதரவுடனும் பங்களிப்புடனும் இலங்கை அரசு நடத்தியது. இறுதிப்

போரில் இந்தியப் படை அதிகாரிகளும் ஆயுதங்களும் பயன்படுத்தப் பட்டன என்பது இபபோது உலகறிந்த இரகசியமாக மாறி விட்டது. அன்றும் இன்றும் இதே இந்திய அரசின் செயல் திட்டப்படிதான் இலங்கை அரசும் எமது அரசியல் தலைவர்களும் நடந்து வருவது இன்றும் நிலவும் உண்மையான கள நிலை.

போரின் போது விடுதலைப் புலிகளின் ஜனநாயக அமைப்பாக புலிகளால் கட்டமைத்து உருவாக்கப் பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளையும் மக்களையும் அழிக்கும் செயலில் முழுமையான ஆதரவை மறைமுகமாக வழங்கினர் என்பது மறுக்க முடியாத உண்மைகள். அவர்களால் சர்வதேச நீதி விசாரணையை கோரவோ தமிழ் மக்களுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வை பெற்றுக் கொடுக்கவோ கடந்த 8 வருடங்களாக முடியாமல் இருப்பதற்கும் இவர்களது துரோகப் பின்புலமே காரணமாகும்.

வடமாகாண சபை நீண்ட கால தாமதத்துக்குப் பின்னர் சுயாதீன சர்வ தேச போர்க் குற்ற விசாரணை கோரும் தீர்மானத்தை ஐ.நா.விடம் அனுப்பியதற்கே த.தே.கூ. தலைமை கடும் கோபத்தை வெளிப்படுத்திய பின்னரும் எளிதில் நீதியைப் பெற்று விடுவது இலகுவாக இருக்கும் எனக் கருத முடியாது.

புனர் வாழ்வு முகாம் என்பது கசாப்புக் கடைக்கு மகாத்மா காந்தி உணவகம் எனப் பெயர் வைப்பதைப் போன்றது. முதலில் வதை முகாம்கள் எத்தனை அவை எங்கே இருந்தன இப்போதும் இயங்குகின்றன என்ற எந்த விபரமுமே எவருக்கும் தெரியாது. கொஞ்சம் தெரிய வந்த வவுனியா யோசப் மூகாமே உலகத்தின் பயங்கரங்கள் அனைத்தும் கொண்ட கட்டமைப்பு என உலக மனித உரிமைகள் அமைப்பு கூறியது.

அது போன்ற ஒன்று திரிகோணமலையில் இருந்தது தெரிய வந்தது. ஆனால் பொது மக்கள் வாழும் பகுதிகளிலும் காட்டுப் பிராந்தியங்களிலும் அவை இருந்தன என பின்னர் வெளியான செய்திகள் கூறின. ஆயினும் உண்மை நிலை எவருக்கும் தெரியாது. அண்மையில் கோத்தபாய பிரித்தானிய படைகளின் நிலத்தடி பங்கர்களும் திரிகோண மலையில் உள்ளன என வதை முகாம்கள் பற்றி கூறியுள்ளார்.

பொதுவாக இந்த புனர்வாழ்வு முகாம்கள் எல்லாம் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் நடத்துவது போன்ற புனித (?) தலங்கள் என்ற கருத்து பலரிடம் இன்றும் நிலவுகிறது. ஆனால் உண்மை நிலை மிகவும் பயங்கரமானதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வு வம்ச விருத்தி பற்றியது என்பதும் வெளியாகும் செய்திகள் காட்டுகின்றன.

எடுத்துக் காட்டாக ஒரு கண்கண்ட சாட்சியாக மட்டக் களப்பு வாழைச் சேனை கோரலப் பற்று பகுதியைச் சேர்ந்த 46 வயதான முன்னாள் விடுதலைப் போராளி முதல் முறையாக 2013ல் ஆக்கிரமிப்புப் படையால் கைதாகி 2017 வரை தடுப்பு முகாமில் இருந்தவர். அவர் கூற்றுப் படி தமக்குத் தெரிந்த ஆகக் குறைந்து 15 முன்னாள் தமிழீழ விடுதலைப் போராளிகள் சந்தேகத்துக்கு இடமான ஊசிகள் கொடுக்கப் பட்டனர் என்பதை கண்டேன் எனக் கூறி உள்ளார்.



அவருக்கே 5 தடவைகள் அறியப் படாத சந்கேமான ஊசி மருந்துகள் ஏற்றப் பட்டன என்றும் அவை காரணமாக தம்மால் கவனம் செலுத்தும் ஆற்றல் இழந்து விட்டதாகவும் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டதாகவும் ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

மற்றும் ஒரு மட்டக்களப்பின் குக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு முன்னாள் புலிப் போராளி மீன் பிடி சங்கத்தின செயலராகப் பின்னர் பதவி வகித்த நிலையில் அவரது பதவியைத் துறக்க இராணுவம் கட்டாயப் படுத்திய தோடு விடுதலையான பின்னரும் 3 தடவைகள் இரத்தப் பரிசோதனை செய்யக் கட்டாயப் படுத்தப் பட்டார்.

இந்த விடயத்தைச் சர்வ தேச விவாதமாக எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் அவசரமும் எமது இனத்துக்கு உண்டு. அந்தக் கடமையை நாம் மறக்காமல் செய்வோமா?





## திருமண நாள் One Day SALE

**தமிழ்நாட்டின் பிரபல காஞ்சிபுர தறியாளர்களுடன்**

**இணைந்து மாபெரும் காஞ்சிபுர சேலைத் திருவிழா**

## BUY ONE GET TWO!

# Gopara Gnanam

Textiles & Jewellery Shop

**Rheinische Straße 81, 44137 Dortmund**

**Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542**



# பிரேசில்

– பூமிபுத்ரன்

## மீண்டும் இழைக்கப்படும் வரலாற்றுத் தவறுகள்

உலகின் பரப்பளவில் ஐந்தாவது பெரிய நாடும், சனத்தொகை அடிப்படையில் ஆறாவது பெரிய நாடுமாகிய பிரேசில் நாட்டின் முன்னைநாள் அரசுத் தலைவரான லூலா டா சில்வா ஊழல் குற்றச் சாட்டுக்கு ஆளாகி சிறைசெல்ல உள்ளார். அரசுத் தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்று 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரது மக்கள் செல்வாக்கு இன்னமும் குறையாமல் உள்ள நிலையில், எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள அரசுத் தலைவர் தேர்தலில் தொழிற் கட்சியின் சார்பில் மீண்டும் போட்டியிட உத்தேசித்திருந்த நிலையிலேயே அவர் தொடர்பான தீர்ப்பு வெளியாகி இருந்தது.

தீர்ப்பு வெளியான நாளில் அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு கூட்டு வைத்துள்ள உள்நாட்டு முதலாளிகள் முன்னைய இராணுவ அடக்குமுறை ஆட்சியைக் கொண்டு வருவதற்காகவே தன் மீதான ஊழல் வழக்கைச் சோடித்ததாகத் தெரிவித்துள்ள சில்வா, அதற்குத் தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனச் சூழுரைத்துள்ளார். 2003 முதல் 2011 ஆண்டு வரை - இரண்டு தடவை - அரசுத் தலைவராகப் பதவி வகித்த சில்வா, பிரேசில் வரலாற்றில் இடதுசாரிகளின் ஆட்சிக்கு அத்திவாரம் இட்டவர் எனக் கொள்ளப்படலாம். 1964 முதல் 1985 வரை நீடித்த சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டு சுதந்திரக் காற்றை அந்தநாட்டு மக்கள் சுவாசிக்க ஆரம்பித்ததன் பின்னான நாட்களில் - தென்னமெரிக்கா எங்கணும் ஏற்பட்டதைப் போன்று - இடதுசாரிகளின் எழுச்சி பிரேசில் நாட்டிலும் ஏற்பட்டது. இதன் விளைவாக தொழிற்சங்க வாதியான சில்வா அரசுத் தலைவராக பொறுப்பேற்கும் வாய்ப்பு உருவாகியது.

அவரது ஆட்சிக் காலப் பகுதியில் பிரேசில் பல்வேறு துறைகளில் முன்னிலை வகித்தது. நாட்டின் பொருளாதாரம் வரலாறு காணாத வேகத்தில் வளர்ச்சி கண்டதுடன், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பாரிய முன்னேற்றத்தையும் நாடு கண்டது. உலக மன்றங்களில் அதிக செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்த சில்வா, பிறிக் எனப்படும் பிரேசில், ரஸ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் கூட்டணி மன்றத்தை உருவாக்கியதில் முன்னின்றவர். அது மாத்திரமன்றி அமெரிக்கா உருவாக்கிய சுதந்திர வர்த்தக வலயத்தில் பிரேசிலை இணைப்பதற்கு மறுப்புத் தெரிவித்தவர். அத்தோடு, தென்னமெரிக்கப் பிராந்தியத்தில் இடதுசாரிகளின் ஆட்சிகளை வரவேற்றதுடன் அதனை ஊக்குவித்து, அந்தச் செயன்முறைக்குத் தலைமை தாங்கியவர். சில்வாவின் நிகழ்ச்சி நிரலில் அமெரிக்காவிற்கு

உவப்பில்லாத இன்னும் பல செயற்பாடுகள் இருந்தாலும் அவர் மீண்டும் பதவிக்கு வருவதைத் தடுத்து விடுவதில் அமெரிக்கா மல்லுக் கட்டுவதற்குரிய முக்கிய காரணம், அந்த நாட்டில் உற்பத்தியாகும் பெற்றோலிய விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதியை நாட்டு மக்களின் கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்காகச் செலவிட அவர் முன்வைத்த யோசனையே.

இதற்காக அமெரிக்காவும் அவர்களது அடிவருடிகளும் கையில் எடுத்துக் கொண்டுள்ள ஆயுதம் ஊழல் குற்றச் சாட்டுக்கள். இதே குற்றச்சாட்டில் சில்வாவின் அரசியல் வாரிசும், அவரின் பின்னே தொழிலாளர் கட்சி சார்பில் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று பதவியேற்றவரும், இராணுவ அடக்குமுறைக் காலகட்டங்களில் சிறையிருந்தவருமான திருமதி டில்மா ரூசேவ் அவர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவியில் இருந்து அகற்றப் பட்டிருந்தார்.

தற்போது சில்வா மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் அவர் பதவி வகித்த காலத்தில் ஒப்பரேசன் கார் வோக்ஷ் என்ற பெற்றோலிய நிறுவனத்திடம் இருந்து 1.1 மில்லியன் டொலரை கையூட்டாகப் பெற்றார் என்பதே.

ஆதாரம் எதுவும் சமர்ப்பிக்கப்படாத இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தவர் வேறு யாருமல்ல. ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகித் தண்டிக்கப்பட்ட அந்த நிறுவனத்தின் தலைவரே. எனினும் ஊழல் நிறைந்த பிரேசில் நாட்டு நீதித்துறை நிறுவனத் தலைவரின் கூற்றை ஆதாரமாகக் கொண்டு சில்வாவிற்கு 9 வருட சிறைத் தண்டனை விதித்தது.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக சில்வா மேன்முறையீடு செய்ததைத் தொடர்ந்து ஒட்டைக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாள்ப்பாள் என்ற பாணியில் - அவரது தண்டனைக் காலம் 12 வருடங்களாக அதிகரிக்கப் பட்டது. இதில் விநோதம் என்னவென்றால் பிரேசில் சட்டத்தின்படி ஒருவர் தனது தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்தாலும் அவர் சிறையிருக்க வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேறு ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும்.

அத்தகைய வழக்கின் தீர்ப்பே ஏப்ரல் 5 ஆம் திகதி வழங்கப்பட்டது. 11 நீதிபதிகள் கொண்ட அமர்வில் அறுவர் சில்வாவிற்கு எதிராகவும் ஐவர் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கினர். இது தொடர்பான விசாரணை காலையில் ஆரம்பித்து மறுநாள் அதிகாலை வரை நீடித்தது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கட்டுரையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் நேரம் சில்வா அவர்கள் நிச்சயமாகக் கைது செய்யப்பட்டிருப்பார். தனது சிறைவாசத்திற்கு எதிராக அவர் உச்ச நீதிமன்றத்திலும், அதி உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீடு செய்ய முடியும்.

ஆனால், அடுத்த அரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ள சூழலில் தீர்ப்பு கிடைத்து விடுமா என்பது சந்தேகமே. என்ன நடந்தாலும் நடைபெறப் போகும் தேர்தலில் சில்வா ஆதரவு பெற்ற வேட்பாளர் ஒருவரே வெற்றி பெறுவார் என ஊகிக்கப் படுகின்றது. அது நடக்கலாம் நடக்காமலும் போகலாம். ஆனால் தற்போதைய பிரேசில் நிலவரம் சொல்லும் சேதி ஒன்றே. அது இடதுசாரிகள் கண்டிப்பாக கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சேதி.

புரட்சி ஒன்றின் ஊடாகவே அரசியல் மாற்றம் சாத்தியம் என்பதை முழுமனதாக ஏற்றுக் கொள்பவர்கள் உண்மையான இடதுசாரிகள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக ஆட்சியதிகாரத்தை இடதுசாரிகள் கைப்பற்ற நேரிட்டால், தமது பதவிக் காலத்தில் அவர்கள் அரச கட்டமைப்புக்களில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியே ஆகவேண்டும். அதனைச் செய்யத் தவறுவார்களேயானால் இன்று லூலா டா சில்வா அவர்களுக்கு ஏற்பட்ட நிலையே அவர்களுக்கும் உருவாகும்.

ஏற்கனவே வரலாற்றில் இதற்கான படிப்பினைகள் பல உள்ளன. சிலி நாட்டில் 70 களின் ஆரம்பத்தில் பதவிக்கு வந்த சல்வடோர் அலண்டே அவர்களின் கதி என்னானது என்பதை உலகம் மறந்திருக்க முடியாது. இருந்தாலும், வரலாற்றுத் தவறுகள் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

வரலாற்றில் இருந்து பாடம் கற்கத் தவறுபவர்கள் தொடர்ந்தும் அந்தத் தவறையே மீண்டும் செய்ய சபிக்கப் பட்டவர்கள் எனக் கூறுவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?



# அரசியல் அரங்குகளும் ஆரியக் கூத்தாடிகளும்!

– மனோ

'ஆரியக் கூத்து ஆடினாலும் தாண்டவக் கோனே காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே' என்கிற பழைய தமிழ் சித்தர் ஒருவரின் பாடல் வரிகள் எத்தனை காலம் போனாலும் உலக நடை முறைக்கு மிகச் சரியான தத்துவ வரிகளாகவே இன்றும் காணப் படுகின்றன.

நடந்து முடிந்த ஐ.நா.மனித உரிமை ஆணைச் சபைக் கூட்டமும் வழமை போலவே ஆரியர்களின் ஆக்கிரமிப்புக் களமாகவே விளங்கியதை அங்கு நடந்தவைகளைக் கூர்ந்து கவனித்த தமிழீழ தேசியவாதிகள் ஏற்றுக் கொள்வர்.

ஆரிய பௌத்த சிங்கள இனவெறியாளர்களின் வாதங்கள் சரியோ பிழையோ தர்மமோ அதர்மமோ நீதியோ அநீதியோ சபை அரங்குகளில் பலமாகவே ஒலித்தன. ஈழத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசுகளின் இராணுவ அடக்கு முறை ஆட்சிக்கு சர்வதேச ஆதரவு இன்னமும் வலுவாகவே உள்ளது. சிங்கள அரசு இணைந்து நிறைவேற்றிய 30-1 தீர்மானமே செத்த எலியாக நாளாந்தம் நாறி அழுகிப் போகிறது.

அதன் நாற்றம் எந்த ஒரு சர்வதேசத்தின் நாசிகளையும் உறுத்த வில்லை என்ற பேருண்மை ஒரு சில மனித மனங்களை மட்டுமே உணர்த்துகிறது. இதே நிலை இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என எவருக்குமே தெரியாது. போரின் முக்கியமான மனித சாட்சியங்கள் மரணிக்கும் செய்திகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இப்படியாவது காலம் கடத்துவதன் மூலம் சிங்களம் தனது குற்றங்களை வலுப்படுத்தும் சாட்சியங்களை அழித்து விடலாம் என்ற எதிர்பார்ப்பும் சிங்களத்திடம் இருப்பதை மறுத்துவிட முடியாது.

முன்னாள் போராளிகளின் மரணங்கள் கூட அரசின் சிறைப் படுத்தப் பட்ட வதை முகாம்களில் மறுவாழ்வு மையங்களில் வலிந்து கொடுக்கப் பட்ட விச ஊசி மற்றும் நச்சு மருந்துகள் கொண்ட உணவால் உண்டாகும் மரணங்கள் என்பது விடுதலையான மக்களின் குற்றச்சாட்டு.

இக்குற்றச் சாட்டுகளில் துளியும் உண்மை கிடையாது என அரசும் அதன் ஆதரவு ஊடகங்களும் கூலி அரசியல் செய்யும் பேர்வழிகளும் அடித்துப் பேசும் அநியாயம் நடக்கிறது. உண்மையா இல்லையா என நடுநிலையான ஆய்வுகள் மூலம் கண்டறிந்து ஏற்பதோ மறுப்பதோ ஒரு நடுநிலை அணுகுமுறை என வாதிட்டு எடுத்துச் சொல்ல யாருமே இல்லை என்பது மிகப் பெரும் அவலம்.

எமக்கு முன்னால் உள்ள பிரச்சினை என்ன வென்றால் ஒரு நடு நிலையான நாட்டை கண்டு பிடிப்பதும் அதன் மூலம் நீதியைப் பெறுவதும் மிகப் பெரும் சவாலான விடயமாக உள்ளது. இலங்கையை பீடித்துள்ள பிசாசுகள் எல்லாம் தமிழ் இனத்தின் தேசியத்தை ஏற்க மறுக்கும் தமிழ் இன அழிப்பை நடத்தி முடித்த கொலைகார அசுர பலம் கொண்ட நாடுகளாக உள்ளன. அவர்கள் அடித்த கொள்ளையில் பங்குப்



சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12
மாதம் 1200CHF. இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com
info@nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
GUARANTEE
BEST PRICE
GUARANTEE
உயர்தர
புடவைகள்
மற்றும்
துணி வகைகள்
வாங்க
சிறந்த இடம்
Rani
palace
044 440 60 52
ranipalace60@gmail.com
Tel: 044 440 60 52
Neugasse 60, 8005 Zürich - Switzerland

பிரச்சினையால் தமக்குள் அடித்துக் கொண்டால் அல்லாமல் உண்மையும் நீதியும் வெளியே தலைகாட்டும் சாத்தியமே இல்லை. ஏனென்றால் தமிழரின் வளங்கள் மட்டும் அல்ல முழு இலங்கைத் தேசத்தின் நிலம், நீர், கடல், கனிம வளங்கள் எல்லாம் கொலை காரர்களால் கொள்ளை யிடப்படுகின்றன.

இராம இராவண அல்லது ஆரிய திராவிட போர் வெறும் இலக்கிய நிலையில் இருந்து இனங்களின் இனவெறிப் பகையாக மீள் உருவாக்கப் பெற்றுவிட்ட அரசியல் இலங்கையிலும் இந்தியாவிலும் பலமடைந்துள்ள நிலையை இன்றைய கள நிலை உறுதிப் படுத்துகிறது. பிரபாகரனை இராவணனாக பேசும் அரசியல் இன்று இந்தியாவிலும் உயிர் பெற்றுள்ளதைக் காணலாம்.

இந்தியாவின் இன்றைய ஆளும் பா.ஜ.க. தலைவர்கள் பலரும் முன்னர் ஆண்ட காங்கிரஸ் தி.மு.க. அரசுகளும் தமிழ் இன ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த இராம இராவணப் போர் அரச அதிகாரிகளை வழி நடத்தின என்பதற்கு இந்திய மத்திய அரசின் பல தமிழ் வெளி உறவுச் செயலர்கள் பணி நீக்கமோ பதவிப் பறிப்பின் மூலமோ ஆரிய சிங்கள இனவெறிக்குத் துணை போன வரலாறு நிறையவே உண்டு.

இன்று 2009க்குப் பின்னர் தமிழகமும் தமிழர்களும் இந்தியாவில் மிகப் பெரும் நெருக்கடி நிலையில் உள்ளனர். தமிழகத் தமிழரின் வாழ்வாதாரங்கள் அனைத்துமே வடக்கின் பெரு முதலாளிகளுக்கும் உலகப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அடிமாட்டு விலையில் பறித் தெடுக்கப்படுகின்றன.

இலங்கையில் சிங்களம் திட்டமிட்ட கலவரங்களால் பறித்தும் எரித்தும் போரால் அழித்தும் தமிழின அழிப்பை நடத்தியது போன்று தமிழகத்தில் ஆபத்தான அணு மின் நிலையங்கள், இரசாயன உற்பத்திச் சாலைகளால் மக்களின் ஆரோக்கியம் ஆபத்தான எல்லைக்கு போய் விட்டது. போதாக் குறைக்கு நிலத்தடி எரி வாயு கைட்ரோ காபன் நியூட்ரினோ ஆய்வு போன்று மலைகள் காடுகள் வயல்கள் என அனைத்தும் அழிக்கப் படுகின்றன. இவை எல்லாம் அழிந்த பின்னர் தமிழன் எப்படி வாழ முடியும்?

- அடுத்த இதழில் தொடரும்....



BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide

விமானச் சீட்டுக்கள் சிறப்பு விலையில்... எம்மிடம்

Rheinischestr. 72,
44137 Dortmund
Tel.: 0231/10876361

Öffnungszeiten: Mo-Sa 09:00-20:00 Uhr

Last minute Tickets available
on Sunday and Holidays

துரித பணமாற்றுச் சேவை

VALUTRANS MONEY TRANSFER
TEMPO MONEY TRANSFER
BALU ASIAA Money Transfer
Ria

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை

ASI Boucherie
PARIS-FRANCE

வாடிக்கையளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்
தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்
ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.
சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!
அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.
இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்

ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ
கிலோ 4,20€

தினமும் ஆட்டுப்பங்கு

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord



www.sweetchilli-do.de
Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
CELEBRATION 9th ANNIVERSARY
8 வது ஆண்டுகள் நிறைவு பெற்று 9 வது ஆண்டில் குதுகலமாக ஆரம்பிக்கும் வேளை எமது வாடிக்கையாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்றும், இன்றும், என்றும் ஓரே சுவையுடன், தரம் மட்டும் கொள்கையாகக் கொண்டு,
பிரியாணி பலவகையில், பல விலைகளில் , செய்து கொடுக்கப்படும்.
புதியதாக உங்கள் இல்லங்களில் நடைபெறும், சுபகாரியங்களுக்கும் சைவ + அசைவ உணவுகளை பரிமாறக் காத்திருக்கின்றார்கள்.
பலரகப் பலகாரங்களை, தரமாகவும், குறைந்த விலையிலும் அறுசுவையுடனும் முறுக்கு, தட்டவடை, அச்சுப்பணியாரம், அரியதரம், மிக்ஷர், உழுந்து வடை, கடலைவடை, கிழங்கு றொட்டி , மீன் றொட்டி, றோல்ஸ், கேக், கேசரி, குளோப் ஜாம், பூந்திலட்டு, பகோடா, செய்து கொடுக்கப்படும்.
பிறந்த தினக் கேக் அழகாக செய்து கொடுக்கப்படும். உருசியையும், தரத்தையும் விரும்புபவர்கள்
Sweet Chilli
Tel: 0231 315 46 84
By. Hanafi Nana



AMMA's food
AMMA's food
Sri Lankan & South Indian Specialities
வெள்ளிக்கிழமை அறுசுவையுடன்
மரக்கறிச் சாப்பாடு
மற்றும் பாலப்பம், சனிக்கிழமை
ஸ்பெஷல் பிரியாணி மற்றும்
பாலப்பம் இன்னும் பற்பல...
வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
எதுவும் சாப்பிடலாம்...
எவ்வளவும் சாப்பிடலாம்...
வாருங்கள் வந்து பாருங்கள்...
விருப்போடு உண்ணுங்கள்...
வியந்து செல்வீர்கள்...
மற்றுமொரு நற்செய்தி!!!
01.01.2018 முதல் எமது உணவகத்தால்
LIEFERUNG செய்யப்படும் என்பதை எமது
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்!
Öffnungszeiten:
Mo. - Do.: 11:30 - 22:30
Di.: Geschlossen
Fr. & Sa. 11:30 - 23:00
So. & Feiertag: 15:00 - 22:30
Rheinische Str. 80,
44137 Dortmund
Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693
Web: www. ammas-food.de
Mail: info@ammas-food.de
உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!



# சில நேரங்களில் சில மனிதர்கள்...

## பாகம் - 3

– வண்ணை தெய்வம்

'சேச்சே! இதென்ன பேச்சு? கணேஸ் யாருடைய கோபத்தையும் உடனடியாச் சமாதானப் படுத்திவிட முடியாது. உங்கம்மா உங்க வீட்டிலை இருந்தாலென்ன எங்க வீட்டிலை இருந்தாலென்ன. ஒரு கிழமை அவங்க எங்க வீட்டிலை இருக்கட்டும். நீயும் உன் மனைவிகூட மனம் விட்டுப் பேசு. உன் நிலமையையும் உன் மனைவிக்கு புரியவை! அது க்கப்புறம் இரண்டு பேருமா எங்க வீட்டுக்கு வாங்க. அதுவரைக்கும் அம்மா எங்க வீட்டிலேயே இருக்கட்டும். நானும் பக்குவமா அவங்ங கிட்ட பேசுறன். எல்லாம் சரியாயிடும்.

உனக்குத்தான் வீண் சிரமம்! இல்லையா? கணேஸ் மெதுவாக முணுமுணுத்தான்.

'கணேஸ் எத்தனை நாள் உங்கம்மா கையாலை சாப்பிட்டிருக்கிறன்?. தாய் பிள்ளைகளுக்கிள்ளை இதெல்லாம் பிரச்சனையா?"

'நீ வந்து எவ்வளவு நேரமாச்சு ஒரு காப்பி கூட தராமல் கதைச்சுக்கொண்டே இருந்திட்டன்" எனச் சொல்லிக்கொண்டே 'என்னப்பா" என மனைவியைக் கூப்பிட்டபடியே எழுந்தான் கணேஸ்.

கணேஸ், சாந்தி, பார்வதியம்மா மூவரும் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் எல்லாம் முடிந்த பின்னர் மண்டபத்தில் ஒரு ஓரமாக அமர்ந்தார்கள். வசந்,தான் பேச்சை ஆரம்பித்தான் 'அம்மா இண்டைக்கு காலை உங்க வீட்டுக்குப் போனன்... கணேசுடன் பேசினன்..." பார்வதியம்மா எதுவும்பேசவில்லை. 'கணேஸ் உங்க காலிலைகூட விழுந்து மன்னிப்புக் கேட்டானாமே..." இப்பொழுது பார்வதியம்மாவிடம் இருந்து 'ம்" என்று ஒரு பெருமூச்சு மட்டும் வந்தது.

'அம்மா நீர் அடித்து நீர் விலகவா போகுது?" வசந்தன் முடிக்கவில்லை பார்வதியம்மா சொன்னார் 'அந்த வார்த்தை வலிக்குதேயப்பா!" சிறிது மௌனம் அதன் பின் தொடர்ந்தார் 'எனக்கும் இப்ப அடிக்கடி கோபம் வருகுது! சில சமயம் நானும் நிதானம் தவறீடுறன்தான்! இப்ப நான் திரும்ப என் மகன்வீடுதான எண்ட உரிமையில அங்க போகலாம்... ஆனா என் மருமகளுக்கு அது பிடிக்காதப்பா... அவங்க சந்தோசமா இருக்கிறடுக்கெண்டாலும் நான் விலகி இருக்கிறதுதான் நல்லது எண்டு நினைக்கிறன்."

'அம்மா நீங்க இரண்டுபேரும் என்ன ஜென்ம விரோதிகளா? அவங்களுக்கும் உங்கள மாதிரி ஒரு அம்மா இருக்கிறாங்கள்தானே? நீங்க பெத்த மகளோடை வாக்குவாதப்பட்டா ஊரைவிட்டே ஓடீடுவீங்களா? ஏதோ கோபத்திலை இரண்டுபேரும்தான் வார்த்தையை விட்டுட்டீங்க. கணேஸிற்கு நீங்களும் முக்கியம்! மனைவியும் முக்கியம்! அவன் யார் பக்கம்தான் நிப்பான்? ஆக நடந்தது நடந்திட்டிது. அதை மூண்டு பேரும் மறந்திடுங்க. எல்லாம் சரியா வரும்". சமரசப் பேச்சு வார்த்தை முடியாமலேயே மூவரும் வீட்டிற்கு கிளம்பினார்கள்.

மறுநாள் வீட்டில் இருந்து மூவரும் ஊரையாடும் போது... தன் மருமகள் மேல் தான் பிரியம் காட்டிச் செய்த காரியங்களையும்... பல சந்தர்ப்பங்களில் பலரிடமும் மருமகளை விட்டுக்கொடுக்காமல் பேசியதையெல்லாம் நினைத்து அங்கலாய்த்தார் பார்வதியம்மா.

இப்படியாக தினம் தினம் மனம் திறந்து கதைக்க... 'நான் பெத்த பிள்ளைக்கு அவ ரண்டாவதா வந்த தாயப்பா! என் பிள்ளை என் மேலை வைச்சிருந்த பாசத்தையெல்லாம் புடுங்கி எடுத்திட்டாளோ! எண்ட ஒரு பொறாமைதான் எனக்கும்! என்ன இருந்தாலும்



சூரிச் மாநகரில்
அபிரா
டெக்ஸ்டைல்
திருமணப்பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள் மற்றும்
புதிய பஞ்சாபி வகைகள், சோளி ஹிட் வகைகள்,
சீகுயின்ஸ் சாறிகள், புதிய வகையான சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான கோட், சுட், சேட், சர்வாணி வகைகள்
அனைத்தும் நீங்கள் இதுவரையில் எங்கும் பெற்றுருக்காத
வகையில் மிகுந்த மலிவு விலையில் கொள்வனவு
செய்யலாம்!
BEST PRICE
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Contact:
Stauffacher Str. 149
8004 Zürich
Tel: 043 233 54 54
சித்திரைப்
புத்தாண்டை
முன்னிட்டு தொடர்
மலிவு விற்ப்பனை!




SAGANA JEWELLERY
உங்கள் பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகை
களை மாற்றிக் கொள்ள...
உங்கள் உடைந்த நகைகளை
உடன்திருத்திக் கொள்ள...
புதிய டிசைன்களில் அனைத்து
கவறிங் நகைகளை பெற்றுக் கொள்ள...
மாதம் தோறும் 150 பிறாங் செலுத்தி
அதிஷ்டமுறையில் நகைகளைப் பெற்றுக் கொள்ள...
இலங்கை இந்திய நாடுகளுக்கான
துரித பணமாற்று சேவை...
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
மாதம் தோறும் 150 பிறாங்
செலுத்தி அதிஷ்டமுறையில் நகை
களைப் பெற்றுக் கொள்ள...
தாலிக்குப் பொன்னுருக்குதல்,
காது, மூக்குக்குத்துதல் போன்ற
நல்ல காரியங்கள் செய்து
கொடுக்கப்படும்.
Zelgstr. 1, 3027 Bern - Bethlehem
Tel: 031 534 80 99 - Mob: 079 6069063
eMail: v.perinparajah@gmx.ch - Web: www.saganajewellery.com

என்னை பாட்டியாக்கி எங்க வம்சத்தை தளைக்க வைத்தவ அவதானே?" வார்த்தைகளால் நெகிழ்ந்தார் பார்வதியம்மா.
ஒரு வாரம் கழித்து கணேஸிற்கு போன் செய்தான் வசந். மறுநாள் மனைவியுடன் வந்த கணேஸ் தாயின் கைகளைப் பிடித்து மன்னிப்புக் கேட்டான். கணேஸின் மனைவி ஒரு படி மேலே போய் மாமியாரின் காலில் விழுந்துவிட்டார்.

'என்னை மன்னிச்சிடுங்க மாமி. உங்க பிள்ளை சொன்ன ஒரு வார்த்தை உங்களை எப்படிக் காயப்படுத்தியதோ? அது மாதிரித்தான் உங்களாலை நானுமம காயப்பட்டு சில வார்த்தைகளை விட்டிட்டன். ஆதனாலை உங்கமேலை இருக்கிற மதிப்போ... மரியாதையோ இல்லாமல் இல்லை. நடந்ததுக்கு என்னை மன்னிச்சிடுங்க". மாமியாரும் மருமகளும் அந்தக் கணமே தாயும் மகளுமாக மாறிவிட்டார்கள். கணேசனுக்கு பேச வார்த்தைகளே வரவில்லை.

அன்று சாந்தியின் விருந்தோம்பலோடு மூவரும் மாறி மாறி நன்றி சொல்லிக்கொண்டே புறப்பட்டார்கள். பார்வதியம்மா வசந்தைக் கட்டிப்பிடித்து ' வசந் நீயும் நான் பெத்த பிள்ளை மாதிரி என்னை நல்லாக் கவனிச்சாய்! உன்னைமாதிரியே உன்ரை பிள்ளைகளும் பிற்காலத்திலை பெற்றவங்களை தலையிலை தூக்கி வைச்சுக் கொண்டாடுவாங்கப்பா" எனச் சொல்லிச் சென்றது சாந்திக்கு பெருமையாக இருந்தது.
இரவு படுக்கையறையில் சாந்தியின் கைகளைப் பிடித்தபடி அவளின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் வசந். 'என்னங்க" என்றாள் சாந்தி.

'சாந்தி உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? இப்பிடியொரு வார்த்தையை நீ கேட்டதனாலைதானே மூண்டு வரசமா எங்க வீட்டு வாசல் படியையே மிக்காம அண்ணன் வீட்டிலேயே இருக்காங்க எங்கம்மா!. நான் அண்ணியின் முகத்தை பாக்கும் போதெல்லாம் 'பெத்த தாயைக்கூட சந்தோசம் வைச்சிருக்கத் தெரியாத நீயும் ஒரு பிள்ளையா" எனக் கேக்கிற மாதிரி இருக்கு". வசந்தின் குரலில் கோபமும் சோகமும் குழைந்திருந்தது.

சாந்தமாகப் பேசிக்கொண்டிருந்த சாந்தி சட்டெனத் தலையைக் திருப்பிக்கொண்டாள் கொண்டாள். அதன் அர்த்தம் கணவன் பேச எடுத்துக்கொண்ட விடயம் தனக்குப் பிடிக்கவில்லை! என்பதுதான். தொடர்ந்து வசந்,தான் பேசினான்." எந்த வீட்டிலைதான் சண்டை இல்லை? வீட்டுக்கு வீடு வாசல்ப்படி இருக்கத்தானே செய்யும். என்ரை அம்மா உன்னுடைய அம்மா மாதிரி! அவ உனக்கு இன்னொரு தாய்! அவவிட்டை மன்னிப்புக் கேக்கிறதிலை நாங்க ஒண்டும் குறைஞ்சு போயிடமாட்டம். நாளைக்கே அண்ணன் வீட்டுக்குப்போய் அம்மாவைக் கூட்டியருவம். என்ன சொல்லறாய்".
'உங்கம்மா என்னைப்பத்திப்பாத்து என்ன கேள்வி கேட்டா? நான் அடங்காப்பிடாரி எண்டு சொன்னா! அதெல்லாம் உங்களுக்கு மறந்து போச்சா? இப்ப போய் என்னை மன்னிப்புக் கேக்கச் சொன்னா? அப்ப நான்தான் குற்றவாளியா?" சாந்தியின் குரலில் கோபம்... அழுகை... இரண்டுமே கலந்திருந்தது.

'சாந்தி! யார் குற்றவாழி என நிரூபிக்க இது என்ன கோர்ட்டா? இது குடும்பமப்பா! அம்மாவின் வயசென்ன? உன் வயசென்ன? நீதான் விட்டுக்குடுக்கனும். வசந் சொல்லி முடிக்கவில்லை சாந்தி தீர்மானதாகச் சொன்னாள். இஞ்சை பாருங்க உங்ம்மா உங்க அம்மாதான்! அவ என்னுடைய அம்மா இல்லை! என்னுடைய அம்மா என்னை இப்படிப் பேசவே மாட்டா!. விரும்பினா நீங்க போய் கூட்டியாங்க! வந்தா நானும் சகஜமா நடக்கிறன். இந்த மன்னிப்பு கேள் எண்டெல்லாம் கேகாதீங்க!" இப்படிச் சொல்லிவிட்டு படுக்கையில் குப்பறப் படுத்துக் கொண்டாள்.
மகனுடன் கோபித்துக்கொண்டு வந்த கணேஸின் தாயாரைச் சமாதானப் படுத்துவதற்காக எத்தனையோ நியாயங்களை எடுத்துச் சொன்ன சாந்தி தனது விடயத்தில் அந்த நியாயங்களை புறந்தள்ளி வைத்தது வஸந்திற்கு வியப்பாக இருந்தது!

சிலர் இப்படித்தான். அடுத்தவர்களுக்கு ஆயியரம் நியாயங்கள் சொல்வார்கள். அதுவே தங்களுக்கு யாராவது புத்திமதி சொல்லும்போது அது விஷமாக இருக்கின்றது. இது எங்காவது ஒரு இடத்தில் அல்ல! நாட்டில் இப்படிப் பலர் இருக்கின்றார்கள். சில நேரங்களில் சில மனிதர்கள்! தங்களுக்காக நியாயங்களை மாற்றிக் கொள்கின்றார்கள்.

சாந்தியின் நியாயமும் இப்பொழுது அப்படித்தான்! அவளின் மனம் இன்னும் இறங்க வேண்டும்! அதற்காக வஸந் இன்னும் காத்திருக்க வேண்டும்.

Dortmund மாநகரில்

# தமிழர் அரங்கம் கல்விக்கூடம்




## யேர்மன் மொழி வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



## Nachhilfe வகுப்புக்கள்

பாடசாலை மாணவர்களுக்கானது




## தமிழ் மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழி வகுப்புக்களுக்கு கட்டணம் இல்லை



## பரத நாட்டிய வகுப்புக்கள்

டோட்முண்ட் மற்றும் ஒபகவுசனில் நடைபெறுகின்றன



100 பேர் வரை அமரக் கூடிய மண்டப வசதி

உங்கள் இல்ல விழாக்கள், கலை விழாக்கள் அனைத்திற்கும் எமது மண்டபத்தை பயன்படுத்த முடியும்

**Rheinische Str 76 – 80 , 44137 Dortmund**

**0151 633 633 33**

**0231 950 979 00**

---

கம் மாநகரில்..

# ANANTH'S STORE

**Telefon: 02381 4977491 - Telefax: 02381 4977492**

VALUTRANS MONEY TRANSFER

வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

அனைத்து விதமான மளிகை பொருட்கள், கடலுணவுப் பொருட்கள் உடன் மரக்கறி வகைகள், மிக குறைந்த விலையில் எம்மிடம் பெற்று கொள்ள முடியும்.

துரித பணமாற்றுச் சேவை








**Öffnungszeiten:**

**Mo .- Sa.: 09:00Uhr - 21:00Uhr**

**Heinrich-Reinköster-Strasse 10**
**59065 Hamm, Germany**

கம் பிரதான புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் (நடைதூரம்)
வாகனம் தரிப்பிடம் வசதிகள் உண்டு!

# நான் தெள்ளியவோர்
# முடிச்சவிக்கி




பாகம் - 39

– தேவன்

வியாபாரப்போட்டிகள் எப்போதும் சுவாரசியமானவை. பல வியாபாரப்போட்டிகள் கொலையிலும் முடிந்திருக்கின்றன,பல குடும்பங்கள் இதனால் பிரிந்திருக்கின்றன. இன்று உலகில் கொடிகட்டிப்பறக்கும் இரு காலணிகளின் தோற்றமும் வியாபாரப்போட்டியும் பற்றி வாசிக்கக் கிடைத்தது. அதை உங்களுக்கும் அறியத்தருகிறேன்.

யேர்மனியின் பவேரியா மாநிலம். கேற்சோநெளராக் எனும் சிறுநகரம். வாலி-சுக்கிரீவன் போலிருந்த அடி மற்றும் ரூடி சகோதரர்களுக்கிடையான மனக்குழப்பத்தில் ஆரம்பித்த விரிசல் காலணிச் சந்தையை இரண்டு காலணிகளாகப் பிரித்திருந்தது.

கேர்சோ நகரில் அதுவரை எவர் இருவரும் கைகுலுக்குவதற்கு முன் முகத்தைப் பார்ப்பதைவிட அவர் காலில் என்ன அணிந்திருக்கிறார், அடிடாசா (Adidas) பூமாவா (Puma) என்பதைத்தான் முதலில் பார்ப்பார்கள். அடிடாசுக்கு விசுவாசமான கறிக்கடை, பழக்கடை, வெதுப்பகம், மதுபானச்சாலை எதிலும் பூமா விசுவாசிகள் கைநனைக்கமாட்டார்கள் எவ்வளவு போட்டி என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

கெர்பர்ட் கெய்னர், அடிடாசு நிறுவனத்தின் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி. யோசென் செய்ட்சு பூமா நிறுவனத்தின் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி. மூன்று தலைமுறையைக் கடந்து மூடுபனியாய் படர்ந்திருந்த பகையை உடைக்கும் வகையில் இரண்டு நிறுவனங்களுக்கிடையே தோழமையான கால்பந்தாட்டம் தொடங்கவிருந்தது. இருவரும் கை குலுக்கி புன்னகையைப் பரிமாறிக்கொண்டனர். அங்கு குழுமியிருந்த எல்லோருடைய மனத்திரையிலும் கடந்தகாலம் ஒரு கணம் நிழலாடியது.

வெயிலோடு விளையாடி, பனியோடு உறவாடி பள்ளியிலிருந்து வீடுதிரும்பிய ரூடி காலணிப் பட்டறையில் மூத்த மகனாக அப்பாவிற்கு ஒத்தாசையாக இருப்பான். அப்பா கிரித்தோப் காலணித் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார். அம்மா பௌலின் உடைகளை அழுத்திச் சீராக்கிக் கொடுக்கும் கடை நடத்தி வந்தாள்.

அந்நேரத்தில் கட்டாய இராணுவ சேவையை முடித்துவிட்டு உயிரோடு வீடு திரும்பிய இளைஞர்கள் அனைவரும் இயல்பு வாழ்க்கைக்கு மாற முயன்றுகொண்டிருந்தனர். அதில் அண்ணன் ரூடி ஒரு தோல் பதப்படுத்தும் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்திருந்தான்.

தம்பி அடி அம்மாவின் அடுக்களையிலேயே ஒரு தட்டியைப்போட்டு சொந்தமாகப் பிரத்யேகமாக விளையாட்டுகளுக்கான காலணிகளை உருவாக்க ஆரம்பித்திருந்தான். வியாபாரம் சூடுபிடிக்கவும் ஏற்கனவே முன்னனுபவம் உள்ள அண்ணன், தம்பியோடு இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தான். தம்பியும் பச்சைக்கொடிகாட்ட 1924 ல் "டாசுலர் சகோதரர்கள் காலணி நிறுவனம்" என்ற ஒன்றைத் துவங்கினர்.

அண்ணன் வியாபாரத்தில் கெட்டி என்றால், தம்பி புதுப்புது காலணிகளை வடிவமைப்பதில் கில்லாடி.


ESSEN மாநகரில்...
APIRAAMI ENTERPRISE
அனைத்து விதமான மளிகைப்பொருட்கள்,
உடன் மரக்கறிவகைகள் மிக குறைந்த விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.
VALUTRANS
Weltweit Geldtransfer Service
SENDEN SIE GELD WELTWEIT
Pferdemarkt - 9
45127 Essen
0201/236925


செல்லம்மா PARTY SERVICE
திருமண விழா, மஞ்சள் நீராட்டு விழா,
பிறந்த நாள் போன்ற வைபவங்களுக்கான
சைவ மற்றும் அசைவ உணவுகள்...
தொடர்புகளுக்கு:
27 வருடங்களுக்கு மேலாக சமையல் கலையில் அனுபவம் பெற்ற
குமாரன் என்னெப்பெற்றால்
Mobil: 0151 71799900 & 0151 29770077


YOBBANI LEBENSMITTEL & KIOSK
Öffnungszeiten:
Mo - Do: 09:00 - 22:00
Fr & Sa: 09:00 - 00:00
So & Feiertag: 12:00 - 19:00
அனைத்து விதமான
மளிகை பொருட்கள்,
உடன் மரக்கறி வகைகள்
மிக குறைந்த விலையில்
எம்மிடம் பெற்று கொள்ள
முடியும்.
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Grandweg 13, 59494 Soest
eMail: yobbani2017@gmail.com
Tel.: 02921 9445412 | Mobile: 0176 41648852



இருவரின் பலமும் சரியான கூட்டணியாக அமைந்தது. மின்சாரம் கண்டுபிடிக்கப்படாத காலம் என்பதால் அவர்கள் பட்டறையை இயக்க மிதிவண்டியையே பயன்படுத்த வேண்டியிருந்த்து. சக்கரம் சுழன்றது. நிறுவனம் மளமளவென்று வளர்ந்தது.

1928 நெதர்லாந்தில் நடந்த கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டிருந்த 46 நாடுகளில் யேர்மனியிலிருந்து அதிகபட்சமாக சுமார் 300 பேர் கலந்துகொண்டனர். ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்கத்திலிருந்து வெறும் 20 பேர் மட்டுமே கலந்துகொண்டனர். இந்தியாவிலிருந்தும் அதே என்னிக்கையிலே வீரர்கள் கலந்துகொண்டனர் என்ற போதிலும் இங்கிலாந்தின் குடியேற்ற நாடாகவே பங்கேற்றது. அதனால் பதக்கம் வெல்லவில்லை என்பதில் பாதகம் இல்லை.

அந்த வருட ஒலிம்பிப் போட்டிக்களில் அமெரிக்காவை அடுத்து (56) அதிகப்படியான பதக்கங்கள் (31) வென்று யேர்மனி 2வது இடத்திலிருந்தது.

அடி-ரூடி சகோதரர்கள் அந்த ஒலிம்பிக்கில் தொண்ணூறு வீதமான யேர்மனிய வீரர்கள் டாசுலர் காலணிகளை அணிந்து பதக்கம் வென்றதைக்கண்டு பூரிப்படைந்தனர்.

அடி தயாரித்திருந்த புதியவகை இசுபைக் காலணிகள் ஓட்டப்பந்தய வீரர்களை வெகுவாகக் கவர்ந்தது. நீளம் தாண்டுதல், கால்பந்து போன்ற வெவ்வேறு போட்டிக்கு வெவ்வேறு விதமான காலணிகளை அடி வடிவமைத்தான். அதை ரூடி கூவிக் கூவி விற்றான். காலணியின் உலகமே அன்றளவில் சிறியது. அதிலும் விளையாட்டுக்காண காலணிகள் என்பது ஒரு குட்டிச் சந்தை. உலகலாவிய விளையாட்டு வீரர்களிடையே யேர்மனியின் டாசுலர் காலணிகள் பிரபலமடைய ஆரம்பித்தன.

1932 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஒலிம்பிக்கில் 36 நாடுகளே பங்கேற்றபோதிலும் ஜெர்மனி பதக்கப்பட்டியளில் அதள பாதாளத்திற்குச் சென்றது. கிட்லர் அதைப்பார்த்து உறுமினார். 1936 ஒலிம்பிக்கிற்கான அச்சாரத்தை பலமாகப் போட்டார். பார்சிலோனாவா (Barcelona)? பெர்லினா (Berlin)? எங்கு ஒலிம்பிக்கை நடத்துவது என்ற கடும் போட்டியில், கிட்லரால் யேர்மனியின் மீதான முதல் உலகப்போர் சுவடுகளையும் தாண்டி நூலிழையில் இசுபெயின் நாட்டை முந்திக்கொண்டது யேர்மனி. இப்படியொரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை நழுவவிடுவாரா நாசித் தலைவர்.

வரலாறு காணாத ஏற்பாடுகள் தொடங்கின. 100,000 இருக்கைகள் கொண்ட விளையாட்டு அரங்கம்.

உலக தொலைக்காட்சிகளில் முதல் முறையாக பெர்லின் ஒலிம்பிக் நேரலை, 41 நாடுகளில் ரேடியோ வர்ணனை.

இந்த ஒட்டுமொத்த வெளிச்சத்தையும் டாசுலர் சகோதரர்கள் தமது நாசி விசுவாசத்தால் தம்பக்கம் திருப்பிக்கொண்டனர். உலகிலேயே முதல் முறையாக விளையாட்டு வீரர்களுக்கு காலணி, உடை சகிதம் எல்லாவற்றையும் அனுசரணையாகக் கொடுத்து ஆதரிக்கும் வழக்கத்தை டாசுலர் சகோதரர்கள்- குறிப்பாக ஆடி தொடங்கி வைத்தார்.

அடிப்படையில் தானும் ஓட்டப்பந்தய வீரர் என்பதால் உலகின் தலைசிறந்த ஆட்டக்காரர்களெல்லாம் ஒரே இடத்தில் திரண்டிருக்கும் இது போன்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களின் பின்னூட்டங்களை வைத்து சிறந்த விளையாட்டுக் காலணிகளை வடிவமைக்கலாம் என்பது ஆடியின் எண்ணம். ஆனால் ரூடியின் வியாபார மூளை வேறு விதமாகக் கணக்குப் போட்டது. ஏன் இவ்வளவு அலட்டிக்கொள்ள வேண்டும், உலகத்தரத்தில் நம் தயாரிப்பு இருக்கும் பட்சத்தில் தேவையானவர்கள் தேடி வருவர். ஒட்டுமொத்த நாசிப் படைக்கான காலணி ஒப்பந்தம் மட்டும் கிடைத்துவிட்டால் போதும். வாழ்கையை அனுபவிக்கலாம். இருந்தாலும் அவர் தம்பியைத் தடுக்கவில்லை.

1936 பெர்லின் ஒலிம்பிக்கில் கிட்லர் திட்டமிட்டது போலவே ஆதிக்கத்தை நிலைநாட்டும் வண்ணம் அமெரிக்காவை பின்னுக்குத்தள்ளி அதிகபட்சமாக 89 பதக்கங்கள் வென்றது யேர்மனி.(33 தங்கம், 26 வெள்ளி, 30 வெண்கலம்).

அமெரிக்க- ஆபிரிக்கரான யெசி ஒவன்சுக்கு ஆனுசரணை செய்து 4 தங்கம் வெல்ல உதவி புண்ணியம் தேடிக் கொண்டது டாசுலர் காலணி நிறுவனம்.

கிட்லர் பின்நாட்களில் டாசுலர் நிறுவன வளர்ச்சிக்கு கைகொடுக்கவில்லையென்றபோதும் ஒவன்சின் புகழ் “கால்” கொடுத்தது. அடியும், ரூடியும் சேர்ந்து வெற்றி பாடல் பாடவேண்டிய கட்டத்தில் அண்ணன் தம்பி இரண்டு பேருக்கும் மோதல் உருவானது. இரண்டாம் உலகப்போரை அட்சதை தூவி கிட்லர் ஆரம்பித்து வைக்க போருக்குப் போவாதா, வியாபாரத்தை கவனிப்பதா என்பதில் ஆரம்பித்த பிரச்சனை



அந்தரங்கம் வரை சென்றது. சகோதரர்களுக்கு இடையே சொந்த மற்றும் வியாபார மோதல் மேலோங்கியது. அந்த உலகப்போர் சமயத்தில் அமெரிக்க படையினரால் அண்ணன் ரூடி கைது செய்யப்பட்டார்.

சிறைவாசம் முடிந்து வெளியே வந்த ரூடி மனதில் தூ ங்கிக்கிடந்த சிறுத்தை சீறிப்பாய்ந்தது. தம்பி அடிடாசுலர் என்ற தன் பெயரை சுருக்கி அடிடாசு என்ற புதிய வகைக் காலணி தயாரிப்பதை கவனித்தார்.
அதனால் முதலில் ரூடி என்று தன் பெயரின் சுருக்கமாகவே ரூடா ஒரு காலணி தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொண்டு பூமா என்ற நிறுவனத்தை கேற்சோகெனௌராக் நதிக்கரையின் மறுபுறம் ஆரம்பித்தார்.

இரண்டு நிறுவனங்களும் தனக்கான தனித்தன்மையோடு விளங்கின. அது அடி- ரூடி அடிப்படை குணாதிசயங்களில் உள்ள முரண்களைப் பறைசாற்றும் விதமாக இருந்தது. அடிடாசின் வியாபார உத்திகள் எல்லாம் தடாலடி. பூமா வின் வியாபர உக்தி எதிர் துருவம். சில ஆய்வாளர்கள் குறிப்பிடும் நுட்பமான வித்தியாசம் என்னவென்றால் அடிடாசு யேர்மனிக்கே உரித்தான ஆதிக்கத்தின் அடையாளமாகவும், பூமா ஒடுக்கப்பட்டவரின் குறியீடாகவும் மாறிப்போனது.

என்னதான் வியாபார விகித்தைப் பார்த்தால் அடிடாசு பூமாவைவிட 3 மடங்கு பெரியது என்றாலும் கால்பந்து மேதை பீலே முதல் இன்றைய ஓட்டபந்திய தங்கமகன் உசைன்போல்ட் வரை வெற்றிபெறக்கூடிய குதிரைகளை இனங்காணும் சத்தமில்லா புரட்சியை பூமா செய்து வருகிறது. இந்த 60 ஆண்டு பகையை பொங்கடை வெட்டி, அணைக்கும் நோக்கத்துடன்தான் அந்த வரலாற்று சிறப்புமிக்க கால்பந்தாட்டம் நடைபெற்றது.

அவ்வாறு சேராவிட்டால் மூன்றாவதாக ஒருவன் போட்டிக்கு வந்துவிடுவான் என்ற எச்சரிக்கையுணர்வு அடி மற்றும் ரூடி சகோதரர்களிடையே தோன்றியிருந்ததுவே காரணமாகும். என்னதான் ஒற்றுமையாகிவிட்டாலும் அடிடாசும் பூமாவும் இன்றுவரை தமக்கிடையேயான வியாபாரப்போட்டியை நிறுத்திக்கொள்ளவேயில்லை.

மூலம் : Enterpreneur உலக விற்பனை நுணுக்க நாளிதழ்








Münster மாநகரத்தில் 28 ஆண்டுகளாக தமிழ்மக்களின் நன்மதிப்பினை பெற்ற...
TTS BROTHERS
Asien Supermarkt
சமையலுக்கு தேவையான அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் பெற்றுகொள்ள TTS ஆசியா சுப்பமாக்கட்
வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
T.T.S ASIEN SUPERMARKT
0251 1365194
wolbeckerstr.27
48155 Münster
நம்பிக்கை நாணயம் நேர்மை TTS பிறதேஸ் ஆசியா சுப்பமாக்கட



Orient
27வது ஆண்டில்...
Textiles and Jewellery
2017ம் ஆண்டிற்கான புத்தம் புதிய வரவுகளுடன் தொடரும் மலிவு விற்பனை!
PRICE DOWN
சிறுவர்களுக்கான ஆடைவகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
25 ஆண்டுகளாக எம்மோடு பயணித்த அனைத்து வாடிக்கையாள அன்பர்களுக்கும் எமது நன்றிகள்!!!
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36

IMPORTAS
Cash & Carry

# Cash & Carry in Zurich

## Biggest Asian Shop in Swiss




**IMPORTAS CASH & CARRY**

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

**Direct Importers and Solo Distributors of**

Kings · Subash · ELAKKIA · Niru · SURYAA · Maliban · Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56



CENTURY
TRAVELS
Emirates
Emirates Sommer 2018
SRILANKA-COLOMBO
Juni 24,25,26 Bis 4 Wochen ab 589,00€
Juli Anfang Bis Juli 22. ab 749,00€
Juli 22 - 17 August ab 689,00€
Direct Booking Nr.: 017621682149
ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!
الطيران العماني
OMAN AIR
SOMMER 2018
Emirates®
ab
659€
Frankfurt
to
Colombo
46Kg + 7Kg
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
GUARANTEED
BEST
PRICE
الطيران العماني
OMAN AIR
ab
699€
Frankfurt
to
Colombo
30Kg + 7Kg
Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
Web: www.centurytravels.de | eMail: info@centurytravels.de
Hauptsitz:
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225
Niederlassung:
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665
Sri Lanka:
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

# சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள், சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொள்ள




- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாடிக்கயாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் மற்றும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது

REISEGARANTIE | SRV FSV Schweizer Reise-Verband Fédération Suisse du Voyage Federazione Svizzera di Viagg | hweiz Tourismus. Mitglied | IATA Accredited Agent

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5, 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00h
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**

*Preise inkl. Taxen und Zuschläge in der günstigten Buchnungsklasse

**LycaTV**

## உலகின் மிகப் பிரமாண்டமான
## தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா

# €69

SET TOP BOX
INCLUDED

புதுப்பித்தல்

# €49

14 மாதங்கள்



LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா
**€4.99**
மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · SMART · amazon fireTV · kindle fire · XBOX

**50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்**

Sun TV · விஜய் · ZEE தமிழ் · KTV · Sun Music · ஆதித்யா · Athavan TV · Jaya TV HD · Lyca TV Classic · Lyca TV HD

**1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்**



**FRANCE**
**036 967 2151**

**GERMANY**
**069 1200 7102**

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv